Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 227

புதன்கிழமை
10 ஜூலை 2024

ஆனி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

முச்சந்தி முரளி



"உந்த அரைச்சமாவைத்தானே அந்தக்காலத்தில இருந்து எல்லாரும் அரைக்கினம் கண்டியளோ"

# கறைபடியாக் கரங்களுடன் அர்ப்பணிப்பாக அறப்பணியாற்றிய தங்கம்மா அப்பாக்குட்டி

## நினைவுப் பேருரையில் சக்திகிரீவன் புகழாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

நாவலர் பாரம்பரியத்தின் இறுதி விம்பமாகச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திகழ்ந்து சைவத் தமிழுலகில் அழியாப்புகழ் பெற்றுவிட்டார். புகழுக்காக அலையும் உலகில், தங்கம்மா அப்பாக்குட்டி கறைபடியாக் கரங்களுடன் பணியாற் ☞ 15



# பட்ஜெட் விரைவில்

கொழும்பு, ஜூலை 10

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இதற்கென அரச நிறுவனங்களின் வரவு - செலவு அறிக்கைகளைக் கோர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும், மதிப்பீட்டு அறிக்கைகளைக் கோரும் ☞ 16



# சமஷ்டித் தீர்வே எமக்குத் தேவை

## நாடாளுமன்றத்தில் நேற்று சிறீதரன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 10

சமஷ்டி அடிப்படையிலான தீர்வே தமிழர்களுக்குத் தேவை. மாகாணசபைக்கு வழங்கப்பட்டிருந்த சுகாதார அதிகாரமும் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது என்பதையே சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இடம்பெற்றுள்ள சம்பவங்களும் காண்பிக்கின்றன – என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார். ☞ 15

# நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்றார் குகதாசன்

கொழும்பு, ஜூலை 10

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன் மறைந்ததையடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்துக்கு சண்முகம் ☞ 15


# பணிப்புறக்கணிப்புப் போராட்டம்: பங்கேற்காதோருக்கு சலுகைகள்

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 10

அரச உத்தியோகத்தர்கள் நேற்றும், நேற்றுமுன்தினமும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளாமல், கடமைக்கு வந்த அரச உத்தியோகத்தர்களுக்கு விசேட கொடுப்பனவுகளும் இதர சலுகைகளும் வழங்கப்படவுள்ளன.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை சரியாகப் புரிந்துகொண்டு, மக்களுக்கு ☞ 15



# நவாலி சென். பீற்றர்ஸ் படுகொலைகள்

## 29 ஆவது நினைவேந்தல் உணர்வுபூர்வம்!

யாழ்ப்பாணம், ஜூலை 10

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீதான விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின், 29 ஆவது ஆண்டு நினைவுதினம் சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நேற்று மாலை நினைவுகூரப்பட்டது.

பங்குத்தந்தை சந்திரபோஸ் தலைமையில் வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து, தேவாலயத்தின் அருகில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி ☞ 16

# வல்லிபுர ஆழ்வார் ஆலய பிரதம குரு காலமானார்



யாழ்ப்பாணம், ஜூலை 10

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பிரதம குரு கணபதி சாமிக்குரு சுதர்சனக்குரு (வயது-76) நேற்றுக் காலமானார்.

கணபதிசாமிக்குரு சுதர்சனக்குருக் கள் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு ☞ 15

# ஐ.ம.சக்தியுடன் ரணில் இணையலாம்

## ஹர்ஷ டி சில்வா அழைப்பு

கொழும்பு, ஜூலை 10

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரும்பினால் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையலாம். அதில் எவ்வித ஆட்சேபனையும் கிடையாது - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற ☞ 15

சாவகச்சேரி மருத்துவமனை விவகாரம்;

# பொறுப்பற்றுச் செயற்பட்டவர்கள் உடன் தண்டிக்கப்பட வேண்டும்!

## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 10

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வினைத்திறனுடன் இயங்குவதை விரும்பாத சக்திகளே கடந்த சில தினங்களாக அங்கு நிலவிய அசாதாரண சூழலுக்கும், மக்கள் போராட்டத்துக்கும் காரணம் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார். ☞ 15



சாவகச்சேரி மருத்துவமனைக்கு

# பதில் மருத்துவ அத்தியட்சகராக மருத்துவர் ரஜீவ் நேற்று நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் புதிய பதில் மருத்துவ அத்தியட்சகராக கோபாலமூர்த்தி ரஜீவ் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றார்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பதில் மருத்துவ அத்தியட்சகராக நியமிக்கப்பட்ட இராமநாதன் அர்ச்சுனா வடக்கு மாகாணச் சுகாதாரத்துறையில் காணப்பட்ட பல்வேறு ஊழல்களை வெளிக் ☞ 15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போராட்டங்களால் மக்களுக்கே அநீதி

## தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 10**
**தேர்தல் நெருங்கும் நேரத்தில் அநீதியான வகையில் வேலைநிறுத்தங்களை முன்னெடுப்பதன் மூலம் பிள்ளைகள் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்துள்ளனர். இறுதியில் சாதாரண பொதுமக்களே பாதிக்கப்படுகின்றனர் எனத் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.**


அவர் மேலும் தெரிவிக்கையில், உலகவங்கியின் ஆதரவுடன், 2020-2030 டிஜிற்றல் பொருளாதாரத் திட்டம் வெளியிடப்பட்டது.
தற்போதைய 3 பில்லியன் அமெரிக்க டொலர் டிஜிற்றல் பொருளாதாரத்தை 2030 ஆம் ஆண்டுக்குள் 30 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிப்பதே எமது நோக்கமாகும்.
தற்போதைய தொழில்சார் நடவடிக்கைகளின்படி அனைத்து அரச ஊழியர்களுக்கும் 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு கோரப்பட்டுள்ளது. அந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கு வருடத்துக்கு சுமார் 280 பில்லியன் ரூபா மேலதிகமாக செலவு செய்யவேண்டியிருக்கும்.
தேர்தல் நெருங்கும் வேளையில் அசாதாரண வகையில் போராட்டங்களை முன்னெடுத்தமையால், பிள்ளைகள் கல்வி கற்கும் வாய்ப்பையும் இழந்துள்ளனர். இறுதியில் சாதாரண பொதுமக்களே பாதிக்கப்படுகின்றனர் என்பதை வேலை நிறுத்தத்தில் ஈடுபடுபவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்- என்றார். (ச-இ)



# இலங்கையை உலுக்கும் கொலைகள்

## திடுக்கிடும் தகவல்கள்

கொழும்பு, ஜூலை 10
கொழும்பு புறநகர்ப் பகுதியான அத்துருகிரிய நகரில் நேற்றுமுன்தினம் முற்பகல் இருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர். துப்பாக்கிச்சூட்டில் மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர். துப்பாக்கிச்சூட்டில் பலத்த காயங்களுக்குள்ளான 'க்ளப் வசந்த' என அழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேராவும், மேலும் ஒருவருமே பலியாகியுள்ளனர்.
கொலையாளிகள் பயணித்த கார் கடுவெல பகுதியில் கைவிடப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.
கொலையாளிகள் காரில் இருந்து வாகனத்தில் ஏறிச்செல்லும் சிசிரிவி காணொலிக் காட்சிகள் வெளியாகியுள்ளன. வெளிநாட்டிலிருந்து இத்தாக்குதலுக்குரிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
அதேவேளை, வெளிநாட்டுக்குத் தப்பிச்சென்றுள்ள நிழல் உலக தாதா கஞ்சிபானி இம்ரான் இதன் பின்னணியில் செயற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. துப்பாக்கி வேட்டுகளில் 'கே.பி.ஐ.' என்ற எழுத்துகள் இருந்துள்ளன.
கஞ்சிபானி இம்ரானால் இந்நாட்டுக்கு கடத்தப்பட்ட போதைப்பொருள் பொதிகளிலும் கே.பி.ஐ. என்ற இந்தக் குறியீடு பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-44)



# இணைய விளம்பரம் மக்களே ஏமாறாதீர்


கொழும்பு, ஜூலை 10
இலவசமாக இணைய கொடுப்பனவு வசதிகள் வழங்குவதாக செய்யப்படும் விளம்பரங்கள் குறித்து மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது..
அனைத்து தொலைபேசி நிறுவனங்களினாலும் இவ்வாறு இலவச இணையக் கொடுப்பனவு வழங்குவதாக விளம்பரம் செய்யப்படுகின்றது.
இலவசமாக இணைய கொடுப்பனவு வழங்குவதாக குறுஞ்செய்தி, வட்ஸ்அப் தகவல் அனுப்பிவைக்கப்படுவதாக தெரியவருகின்றது.
இவ்வாறு அனுப்பிவைக்கப்படும் லிங்குகளை கிளிக் செய்வதனைத் தவிர்த்துக் கொள்வது பொருத்தமானது என்றும் அறிவுறுத்தப்பட்டது. (ச-இ)

# பொலிஸாரின் கண்ணில் மண்தூவிய பெண் மடக்கிப்பிடிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 10
யாழ். பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான பெண்ணொருவர் நீதிமன்றிலிருந்து தப்பிச் சென்ற நிலையில் மீளக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
குறித்த பெண்ணை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு மலசலகூடம் செல்லவேண்டும் எனப் பொலிஸாரிடம் கேட்டதற்கிணங்க அவரை நீதிமன்ற வளாகத்திலுள்ள மலசலகூடத்துக்கு பொலிஸார் கூட்டிச் சென்றுள்ளனர். மலசலகூடத்தினுள் சென்ற பெண், அதிகநேரமாகியும் வெளியே வராததால் சந்தேகம் அடைந்த பொலிஸார் கதவை உடைத்துப் பார்த்தபோதே அங்கு பெண் இல்லை. அவர் மேற்பகுதியிலிருந்த சிறிய ஜன்னல் ஊடாகத் தப்பிச் சென்றுள்ளார்.
அதனையடுத்து உடனடியாகப் பொலிஸார் அந்தப் பகுதியைச் சூழ தேடுதலில் ஈடுபட்டபோது குறித்து பெண் மடக்கிப்பிடிக்கப்பட்டு மன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ச-20)

# யானை தாக்கி விவசாயி பலி

கொழும்பு, ஜூலை 10
மொனராகலைப் பகுதியில்எத்திமலைபொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த 6 ஆம் திகதி காட்டு யானை தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார் என எத்திமலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



# ஊடகவியலாளர்களுக்கு போதை எதிர்ப்புப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 10
யாழ். மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான போதைப்பொருள் விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறை முன்னெடுக்கப்பட்டது.
மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையத்தினால் யாழ். நல்லூர்ப் பிரதேசசபை மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இந்தப் பயிற்சிப் பட்டறை இடம்பெற்றது.
இதன்போது போதைப்பொருள் விழிப்புணர்வு தொடர்பான கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டன.
பயிற்சிப் பட்டறையில் மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையத்தின் அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-125)

# சம்பளம் உயரின் வரிகளும் கூடும்

## திறைசேரியின் செயலர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 10
தற்போதைய வரவு- செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த வருடம் சம்பள அதிகரிப்பை வழங்கமுடியாது எனவும், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்கள் கோரும் வேதன உயர்வை வழங்கினால் தற்போதுள்ள வரியை மேலும் உயர்த்த நேரிடும் எனவும் திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
தற்போதுள்ள 18 வீத வற் வரியை 20 வீதம் முதல் 21 வீதம் வரை உயர்த்த நேரிடும். எனவே, பொதுமக்களை நசுக்கி அரச ஊழியர்களின் வேதனத்தை அதிகரிக்க முடியாது. அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடு குறித்து ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் பரிந்துரைகளைக் கருத்திற் கொண்டு 2025 வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை மீளாய்வு செய்ய எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கு முன்பதாக நல்லிணக்க சட்டவரைவு

## அரசாங்கம் தீர்மானம்

**கொழும்பு,ஜூலை 10**

**உத்தேச உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்ட வரைவை எதிர்வரும் ஒகஸ்ட் - செப்ரெம்பர் மாதமளவில், தேர்தல்களுக்கு முன்பதாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலகம் உத்தேசித்திருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.**

நாட்டில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிக்கும் பணிகள் அரசாங்கத்தால் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உத்தேச உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டவரைவு தொடர்பில் கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கி வரும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் புத்திஜீவிகளிடம் கலந்தாலோசிக்கப்படுகின்றது. தொடர்ந்து காணாமற் போனோர் பற்றிய அலுவலகத்தின் பிராந்தியக்கிளை, அரச சார்பற்ற அமைப்புகள், மக்கள் பேரவை போன்ற கட்டமைப்புகளின் அதிகாரிகள், பிரதிநிதிகளுடனும், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், போர் விதவைகள், முன்னாள் போராளிகள் உள்ளடங்கலாகப் போரால் நேரடியாகப் பாதிக்கப்பட்டோருடனும் தனித்தனியாக சந்திப்புகள் நடைபெறவுள்ளன.

பல்வேறு தரப்பினரதும் ஆலோசனைகளைப் பெற்று இடைக்கால செயலகத்தினால் தயாரிக்கப்பட்டுவரும் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டவரைவு தேர்தல்களுக்கு முன்பதாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இடைக்கால செயலகம் உத்தேசித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 10

கஞ்சா கலந்த மாவா பாக்குடன் இளைஞர் ஒருவரை ஊர்காவற்றுறை பொலிஸார்நேற்றுக்கைதுசெய்துள்ளதாகத் தெரிவித்தனர்.

காரைநகர் களபூமியில் விசேட ரோந்து நடவடிக்கைகளின்போது சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இளைஞரை வழிமறித்து சோதனையிட்டபோது 15 கிராம் மாவா கலந்த கஞ்சா பாக்கை கைப்பற்றினர்.

இதனையடுத்து சந்தேக நபருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-125)



அரிய வகை உயிரினங்கள் கடத்திய ஐவர் கைது

மன்னார், ஜூலை 10

அரிய வகை உயிரினங்கள் கடத்தலில் ஈடுபட்ட 5 பேரை மீன்பிடி இழுவைமடிப் படகுகளுடன் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். தென்பகுதி கடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பல நாள் மீன்பிடி இழுவைப் படகை சந்தேகத்தில் சுற்றி வளைத்து இலங்கைக் கடற்படையினர் சோதனையிட்டனர்.

இதன்போது 13 மலைப்பாம்புகள், ஒரு மானிட்டர் பல்லி, ஒரு ஆமை மற்றும் 3 கிளிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தக் குற்றச் செயலில் ஈடுபட்ட க சந்தேகத்தில் 5 பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை, இழுவைப்படகு மற்றும் அரிய வகை உயிரினங்கள் என்பனவற்றுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஹிக்கடுவை வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்திடம் கடற்படையினர் ஒப்படைத்தனர். (ச-213)

# வலி. வலயப் போட்டிகளை பிற்போடுவது சாத்தியமல்ல

## பதில் கல்விப் பணிப்பாளர் விளக்கம்

வலிகாமம் வலய கோட்டங்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெறவுள்ள திகதிகளை மாற்றியமைக்குமாறு போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளமாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வலிகாமம் வலயத்துக்குட்பட்ட கோட்டங்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த வாரம் இடம்பெற்று முடிந்த நிலையில் இன்றும், நாளையும், நாளைமறுதினமும் அடுத்த கட்டப் போட்டிகள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறுகிய கால இடைவெளியில் போட்டிகளை நடத்துவதால் மாணவர்கள் உடல் உபாதையால் பாதிக்கப்படக்கூடிய சூழல் ஏற்படும் என்றும் எதிர்வரும் 12,13,14 ஆம் திகதிகளில் இலங்கை மெய்வல்லுநர் சம்மேளனம் நடத்தவுள்ள போட்டிகளிலும் கலந்து கொள்ள வேண்டிய சூழல் எமக்கு ஏற்பட்டுள்ளதாகவும் எனவே போட்டித் திகதிகளை பிற்போடுமாறு மாணவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது குறித்து வலிகாமம் வலய பதில் கல்வி பணிப்பாளர் லாவன்யாவினை தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

பெருவிளையாட்டுகளுக்குரிய திகதிகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. மெய்வல்லுநர் விளையாட்டுகளை பிற்போட்டால் பெருவிளையாட்டுகள் பிரச்சினைக்குள்ளாவதோடு எதிர்வரும் மாதத்தில் முன்னெடுக்கப்படவுள்ள தவணைப் பரீட்சையிலும் தாக்கம் ஏற்படும். தேசிய மட்ட இலங்கை மெய்வல்லுநர் சம்மேளனத்தின் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள 3 பாடசாலைகளைச் சேர்ந்த 20 வயதுப் பிரிவு மாணவர்களே இதன்மூலம் பிரதானமாக பாதிக்கப்படுகின்றார்கள். குறித்த மாணவர்களுக்கு எதிர்வரும் 13, 14ஆம் திகதிகளில் தேசிய மட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன. ஆகையால்தான் மெய்வல்லுநர் போட்டிகள் 10ஆம் திகதிக்கு முன் நகர்த்தப்பட்டன - என்றார். (ம-25-125)

## புதினம் தெரியுமோ?

தலையிடிக்கு தலைகாணியை மாத்தின கதையா, சாவகச்சேரி ஆஸ்பத்திரியில இருந்து அர்ச்சுனா டாக்குத்தரை கொழும்புக்கு பேச்சுவார்த்தைக்கு வரச்சொல்லி, அவர் போனகையோட இஞ்சால வேற ஒராளை அவரின்ர இடத்துக்குப் போட்டிருக்கினம். அர்ச்சுனா டாக்குத்தர் உந்த ஆஸ்பத்திரிக்கு வந்தது முதல்ல ஆருக்கும் தெரியாது, அங்க பிரச்சினையள் வர, அதை பேஸ்புக் லைவ் மூலம் அர்ச்சுனா டாக்குத்தர் சொல்ல வெளிக்கிட்ட பிறகுதான், இப்பிடியொரு துணிஞ்சகட்டை டாக்குத்தர் தங்கட ஆஸ்பத்திரிக்கு வந்திருக்கிறார் எண்டது சனத்துக்கு தெரிய வந்தது. இவ்வளவுநாளும் அந்த ஆஸ்பத்திரியில் ஒரு புண்ணுக்கு மருந்து கட்டப் போனால் கூட, 'இஞ்ச மருந்தில்லை' 'இண்டைக்கு டொக்டர் லீவு' 'உதுக்கு இஞ்ச மருந்து கட்டேலாது, பெரிய காயம், அதால பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போங்கோ' எண்டு சொல்லிச் சொல்லி தங்களை ஆஸ்பத்திரிக்காரர் அலைக்கழிச்ச வெப்பியாரத்திலதான் எல்லாரும் இருந்தவை. இப்ப தங்களுக்காக குரல் குடுக்க, மேலதிகாரிமாரின்ர சீத்துவங்களை கிழிச்சுத் தொங்க விடுறதுக்கு ஒராள் வந்திட்டார் எண்டவுடன் சனமும் களத்தில இறங்கி, அர்ச்சுனா டாக்குத்தருக்காக நீதி கேட்டது.

ஆனால் மேலதிகாரிமாருக்கு, சனத்தின்ர விருப்பத்தை விட, சனத்தின்ர நல்லதை விட, 'எங்களை எதிர்த்தவன் அந்தப் பதவியில இருக்கவே கூடாது' எண்ட ஈகோதான் கூடவா இருந்திருக்கு. அதாலதான், இரவு பகலா கண்முழிச்சுக் காரியமாற்றி அர்ச்சுனாவை இஞ்சையிருந்து தூக்கி, கொழும்புக்கு அனுப்பினவை. இப்ப அவைக்கு உள்ள தலையிடி என்னெண்டால், அர்ச்சுனா ரண்டு கிழமையில செய்த வேலையை இனிமேல் இவையும் தொடர்ந்து செய்யோணும். சனங்கள் அர்ச்சுனாவை மறக்கவேணும் எண்டால், அவர் செய்ததை விட இன்னும் கூடுதலா சாவகச்சேரி ஆஸ்பத்திரியின்ர தரத்தை உயர்த்தோணும். இல்லாட்டி சனங்கள் திரும்ப றோட்டுக்கு இறங்கிடும். அதால அர்ச்சுனா கொழும்புக்கு வெளிக்கிட்டதோட, சாவகச்சேரி ஆஸ்பத்திரியில இருக்கிற குறையளை எப்பாடுபட்டாவது மாத்திறதுக்கு வெளிக்கிட்டிருக்கினம். அர்ச்சுனா கொழும்புக்குப்போன முந்தநாள் இரவோட இரவா ஒரு ஜெனரேட்டரை சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு கொண்டந்து பூட்டியிருக்கினமாம். உந்த ஜெனரேட்டர் இல்லையெண்டு சொல்லித்தான், அர்ச்சுனா திறந்த ஒப்பிரேஷன் தியேட்டரை பூட்டவேணும் எண்டு பூராயம் கதைச்சவை. இப்ப பூட்டின ஜெனரேட்டரை அப்பவே அந்தாளுக்கு குடுத்து, இன்னும் வடிவா செய்யுங்கோ எண்டு ஒத்துழைச்சிருந்தால் உந்தப் பிரச்சினையொண்டும் வந்திருக்காதே.

இன்னொரு விசயம், நெருப்பில்லாமல் புகை வராது தானே. அர்ச்சுனா வீடியோவில சொன்ன விசயங்கள் எல்லாம் உண்மையா, பொய்யா எண்டு இன்னமும் சம்பந்தப்பட்ட அதிகாரிமார் பகிரங்கமாச் சொல்லவேயில்லை, அதை மறைக்கத்தான் புது ஆளைக்கொண்டந்தவையோ எண்ட டவுட்டும் சனத்துக்கு இருக்கு. அதால உந்த மேலதிகாரிமார் தங்கட கை சுத்தம் எண்டு நிரூபிச்சே ஆகோணும், இல்லாட்டி பெஞ்சனில போற இந்தநேரத்தில தீராப்பழியோடதான் போகவேண்டியிருக்கும். அதால பக்கச்சார்பில்லாத ஆக்களைப் போட்டு, ஒரு விசாரணையை நடத்தினால் உண்மை வெளியில வரும். அதோட இனிமேல் இப்பிடியான வேலையளில இறங்கிறதுக்கும் மற்றவை பயப்பிடுவினம், பாப்பம், என்ன நடக்கப் போகுதெண்டு.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இரதோற்சவ வர்ணனை

யாழ்ப்பாணம், ஜூலை 10
புங்குடுதீவு மேற்கு 4 ஆம் வட்டாரம் பிட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் திருக்கோவில் வருடாந்த இரதோற்சவ நேர்முக வர்ணனை, சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. நேர்முக வர்ணனையை சைவப்புலவர் , பிரசங்க பூஷணம் பொன். சந்திரவேல் வழங்கவுள்ளார். (ச-25)

# பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் கால அவகாசம் மேலும் நீடிப்பு!

கொழும்பு, ஜூலை 10
இன்றுடன் நிறைவடையவிருந்த 2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான இணையம் மூலமாக விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வழங்கப்பட்ட கால அவகாசம் மேலும் இரண்டு நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.
தவிர்க்க முடியாத காரணத்தால் குறித்த விண்ணப்பங்க ளுக்கான இறுதித் திகதி ஜூலை மாதம் 12ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ள தாகவும், விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி எக்காரணத்துக்காகவும் பின்னர் மாற்றம் செய்யப்படாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஒ-66)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம் , ஜூலை 10
சாவகச்சேரி மட்டுவில் அம்பலந்துறை வேம்படி கந்தசுவாமி திருக்கோவில் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் இடம் பெறவுள்ளது.
உற்சவத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பரத்திருவிழாவும் மறுநாள் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.45 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் மாலை 6 மணிக்குக் கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன. (ச)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. தேவையான பணம் கையில் இருப்பதால், சமாளித்துவிடுவீர்கள். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்கவும்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். காரியம் தாமதமாகும். சில குழப்பங்கள் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் ஏற்படாது.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் கிடைக்கும். சகோதர வகையில் வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டு. காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்களால் காரிய அனுகூலம் உண்டாகும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சிக் கான பேச்சு நல்லபடி முடியும். உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்படலாம். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும். உறவினர்கள் மூலம் கிடைக்கும் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாய்வழி உறவினர்களால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். அனுசரணையாக நடந்துகொள்ளவும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவு களும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்பு தருவார். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வார்கள். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** எதிர்பார்த்த பணம் கிடைக்கும். ஆனால், திடீர்ச் செலவுகளால் கையிருப்பு கரையும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி ஏற்படும். மனவருத்தங்கள் நீங்கும். இன்று ஆஞ்சநேயரை வழிபடுவது நன்று.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். அதேபோல் செலவுகளிலும் சற்று கவனம் செலுத்துவது நல்லது. தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கும்பம்:** தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். நண்பர்கள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மற்றவர்களுடன் மனவருத்தம் ஏற்படக்கூடும்.

# கும்பாபிஷேக விழா!

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டம் துர்க்கா புரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ஞான துர்க்கை அம்பாள் ஆலயத்தில் அமைக்கப்பட்ட பிள்ளையார் மற்றும் முருகன் சன்னிதானத்துக்கான மகா கும்பாபிஷேக விழா, ஆலய பிரதம குருக்கள் தலைமையில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
இந்தக் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று புதன்கிழமை கர்மா ரம்ப நிகழ்வு இடம்பெறவுள்ளது.
எண்ணெய்க் காப்பு சாத்தல் மற்றும் திரவியம் சாத்தல் நிகழ்வுகள் என்பன நாளை வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை நடைபெறும். (ம-22-131)

# குருபூசையும் சொற்பொழிவும்


யாழ்ப்பாணம், ஜூலை 10
சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவஸ்ரீ பால திருகுணானந்தக் குருக்களின் ஏற்பாட்டில், சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையும் சொற்பொழிவுத் தொடர் 4 உம் சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சமூகமாமணி பா. தனபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இளஞ் சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க. கயிலைவாசன் 'மாணிக்கவாசக சுவாமிகளின் வாக்கும் வாழ்வும்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். (ச-25)

# யாழ். பல்கலையில் விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 10
தொழிற்சங்கப் போராட்டத்தைத் தகர்த்தெறிந்து யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
விஞ்ஞானபீடத்தில் கற்கைநெறிகள் ஆரம்பமாகி உள்ளன. இதேவேளை முகாமைத்துவ பீடத்திலும் விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன. மேலும் எதிர்வரும் வாரமளவில் கலைப்பீட மாணவர்களுக்கான விரிவுரைகளும் ஆரம்பமாகவுள்ளன.
இந்நிலையில் தொடர்ந்தும் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் 68ஆவது நாளாகவும் தமது தொழிற்சங்க போராட்டத்தைப் பல்கலைக்கழக முன்றலில் முன்னெடுத்து வருகின்றனர். இதேவேளை கல்விசாரா ஊழியர்களை 8 ஆம் திகதி பணிக்குத் திரும்புமாறு உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.125)

# மாவைக் கந்தனுக்கு பெருவிழா ஆரம்பம்

யாழ்ப்பாணம் , ஜூலை 10
வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த காம்யோற்சவப் பெருவிழா நாளை வியாழக்கிழமை 11ஆம் திகதி ஆரம்பமாவதை முன்னிட்டு பெருவிழா ஏற்பாடு தொடர்பான சிறப்புக் கூட்டம் , தெல்லிப்பழைப் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.
இதன்போது முதன்முறையாக அகலமான சப்பரம் வீதி உலா வரவிருப்பதால் ஆலய வெளி வீதியில் வியாபார நிலையங்களை அமைப்பதற்கு அனுமதிக்க வழங்கப்பட மாட்டாது. அதற்கு பதிலாக வேறு பொருத்தமான இடங்கள் தரப்படும் என்று மாவை ஆதீன ஹர்த்தா மகாராஜஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள் தெரிவித்தார். (ச-22,66)



கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது. அதனையொட்டி நேற்று எண்ணெய்க்காப்பு சாத்துதல் அதிகாலை ஐந்து மணி முதல் நடைபெற்றது. (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி ஆனந்தபுரம் மீனாட்சி அம்மன் ஆலயத்தின் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் 5ஆம் நாள் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஒ-13)

# வன்முறையாளர்கள் கைதில் பொலிஸார் அசண்டையீனம்



## வடக்கு ஆளுநர் கொதிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 10**
**யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வாள்வெட்டு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுப்பதில் பொலிஸார் அசண்டையீனமாகச் செயற்படக் கூடாது என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் பணித்துள்ளார்.**

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் வாள்வெட்டுகள், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸ் தரப்பிடம் வினவப்பட்டது.

ஊடகவியலாளர் வீட்டின் மீது தாக்குதல், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வீட்டுக்கு முன்பாக வன்முறைக் கும்பல் அச்சுறுத்தல் உள்ளிட்டவை தொடர்பில் ஏன் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று கூட்டத்தில் கேள்வி எழுப்பப்பட்டது.


அதற்கு யாழ்ப்பாண பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர், "எமக்கு அவர்களைத் தெரியும் ஆனால் கைது செய்யமுடியவில்லை" என பொறுப்பற்ற விதத்தில் பதிலளித்தார்.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், "பொலிஸார் எவ்வாறு இப்படிப் பொறுப்பற்ற விதத்தில் பதில் கூறமுடியும். குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு பல்வேறு வழிகள் காணப்படுகின்ற போதிலும் பொலிஸார் அசட்டைத் தனமாகப் பதிலளிப்பது ஏற்றுக்கொள்ளமுடியாது. வன்முறைக் கும்பல்களைச் சேர்ந்தோரை உடன் கைதுசெய்து சிறையில் அடைக்கவேண்டும். அதுவே அவர்களின் பொறுப்பு என்றும் ஆளுநர் கடும் தொனியில் பணிப்புரை விடுத்தார். (ச-26)



## புதிய தலைவர் தெரிவு

மன்னார், ஜூலை 10
மன்னார் ரோட்டரிக் கழகத்தின் புதிய தலைவர் தெரிவு மன்னாரிலுள்ள விருந்தினர் விடுதியொன்றில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. கழகத்தின் 6 ஆவது புதிய தலைவராக திருமலைராசா தனேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார். (ச-25, 213)





தலைமன்னார் பிரதான வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்தில் உயிரிழந்த மன்னார் மடு மாதா சிறிய குருமட உதவி இயக்குநர் அருட்தந்தை அமரர் ஜொனாதனின் பூதவுடல் மன்னார் சேமக்காலையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டது. (25)



எதிர்க்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸவின் பிரபஞ்சம் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான இலத்திரனியல் வகுப்பறை கையளிக்கும் நிகழ்ச்சித்திட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதினின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (ச-22,56)



குப்பிழான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டுக் கிராம ஊர்வலம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகி இடம்பெற்றது. அலங்கரிக்கப்பட்ட சிறியரக உழவியந்திரத்தில் அடியவர்கள் புடைசூழக் கிராமம் முழுவதும் சுவாமி வீதி உலா வந்தார். (ச-66)

# மத்தளவின் நிர்வாகம் கைமாறுவதில் சர்ச்சை

கொழும்பு, ஜூலை 10
மத்தள விமான நிலையத்தின் நிர்வாகம் இந்தியாவுக்கும், ரஷ்யாவுக்கும் வழங்குவது தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ளது. இந்த ஒப்பந்தம் தொடர்பான கேள்விப்பத்திரம் வெளிப்படைத்தன்மையுடன் அமையவில்லை எனவும் ஒப்பந்தம் வழங்கும் தீர்மானம் பக்கச் சார்பாக மேற்கொள்ளப்பட்டதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்து விமானநிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத் தலைவர் அத்துல கல்கெட்டிய தெரிவிக்கையில்,

விமான நிலையத்துக்கு என 700 ஹெக்ரேயர் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் 198 ஹெக்ரேயர் வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மிகுதி 500 ஹெக்ரேயரில் விமான நிலையத்துடன் இணைந்ததாக விமான பயிற்சிக்கல்லூரிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவை அனைத்தையும் சேர்த்து ஒரு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது - என்றார். அதேவேளை மத்தள விமான நிலையத்தை இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் வழங்கும் ஒப்பந்தம் ஓரிரு வாரங்களில் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் இந்தச் சர்ச்சை எழுந்துள்ளது. (ச-25,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொழும்பில் வேட்டு மன்னாரில் சாவடி

மன்னார், ஜூலை 10

மன்னார் பிரதான பாலத்தடியில் சில வருடங்களாக காணப்பட்ட இராணுவச் சோதனைச் சாவடி கடந்த சில வாரங்களுக்கு முன் அகற்றப்பட்ட நிலையில் மீண்டும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, அத்துருகிரிய பிரதேசத்தில், நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தென்னிலங்கையை அதிர வைத்தது.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்கள் மன்னாருக்குச் சென்று தலைமன்னார் ஊடாக இந்தியாவுக்கு தப்பிச் செல்ல உள்ளதாக புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. அதற்கமைவாக மன்னாருக்குச் செல்லும் பிரதான பாலத்தடியில் விசேட இராணுவ சோதனைச் சாவடி மீள அமைக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தீர்க்கமான தீர்வில்லையெனில் போராட்டம் விஸ்வரூபமெடுக்கும்

## வடக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 10

**எமது போராட்டத்துக்கு அரசாங்கம் செவி சாய்க்காது விட்டால் தேர்தல் காலம் வருகிற நேரத்தில் போராட்டத்தை தீவிரமாக்கி விஸ்வரூபமாக வலுப்பெறச்செய்வோம் என்று வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

யாழ். ஊடக அமையத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் விஜயராசா விஜயரூபன் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டினுடைய நிலைமை வழமைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாக நம்பப்படுகின்ற ஒரு சூழலில் தான் இந்த அரசாங்கத்தை நோக்கி நியாயமான சம்பள உயர்வுக் கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றோம். சம்பள உயர்வுகள் நோக்கிய எங்களுடைய கோரிக்கைகள் அரசாங்கத்தினால் சாதகமாக பரிசீலிக்கப்படவில்லை. வெற்றிகரமாக அரசாங்கத்துக்கு ஓர் அழுத்தம் திருத்தமான செய்தியை சொல்லுகின்ற ஒரு போராட்டமாக இது இருக்கின்றது.

இந்த இரண்டு தினங்களில் மேற்கொள்ளப்படும் போராட்டத்துக்கு அரசாங்கம் செவி சாய்க்காது விட்டால் தேர்தல் காலம் வருகிற நேரத்தில் போராட்டம் மேலும் தீவிரமாக வலுப்பெறும் -என்றார். (ச-125)

# குப்பிழானில் மின்தடை பொதுமக்கள் அவதி!

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ். குப்பிழான் கிராமம் முழுவதும் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இரவு திடீர் மின்தடை ஏற்பட்டது.

குறித்த மின்தடை இரவு 7 மணி முதல் சுமார் ஒன்றரை மணி நேரம் அமுலிலிருந்தது. திடீர் மின்தடை காரணமாகப் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர். மின்தடை குறித்து இலங்கை மின்சாரசபையினர் உரியவகையில் முன்னறிவித்தல் விடுக்காதது தொடர்பில் பொதுமக்கள் பலரும் விசனம் வெளியிட்டுள்ளனர். (ம-26-66)

# இந்திய இழுவைமடிகளால் அழிவுறும் ஜீவனோபாயம்

## கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 10

போர்க்காலத்தில் கூட எமது ஜீவனோபாயம் பெருமளவில் பாதிக்கப்படவில்லை. ஆனால் அதிகளவாக எமது கடற்பரப்பை சூழும் இந்திய இழுவைமடிப் படகுகளால் ஜீவனோபாயம் கேள்விக்குறியாகியுள்ளது என்று யாழ். சுழிபுரம் அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் கணபதிப்பிள்ளை சக்திவேல் கவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்தியன் இழுவைமடிகள் இன்றுவரை எமது வலைகளை அறுத்துக் கொண்டுதான் செல்கின்றன. இலங்கை அரசினாலோ, இந்திய அரசினாலோ எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இந்திய இழுவை மடிகள் அத்துமீறி வருவதனை உடனடியாக நிறுத்தவேண்டும்.

இந்த விடயம் தொடர்பில் கடற்றொழில் அமைச்சு கவனம் செலுத்தி எமது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும்- என்றார். (ச-25,125)





# கதைகூறல் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 10

2024 தேசிய கலை இலக்கிய விழாவை முன்னிட்டுப் பாலர் பிரிவு மாணவர்களுக்கான கதைகூறல் போட்டி நேற்று செவ்வாய்க்கிழமை சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. போட்டியில் பாடசாலை மாணவர்கள் மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். (ச-66)

# சவால்களும் தீர்வும் கலந்துரையாடல்

மன்னார், ஜூலை 10

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு மற்றும் மன்னார் மாவட்டச் செயலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட ஊராட்சி முற்றக் கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்டச் செயலாளர் க. கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் அதற்கு உள்ளடங்கலான தீர்வுகள் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகளுடன் முன்னோக்கிச் செல்லுதல் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது. (ச-213)

இணுவில் பொதுநூலக சிறுவர் திறன் விருத்தி மையத்தின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா, இணுவில் பொதுநூலகத் தலைவர் ம.கஜந்தரூபன் தலைமையில் யாழ். இணுவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் . மாநகரசபையின் ஆணையாளர் ந. கிருஷ்ணேந்திரன் கலந்து கொண்டார். (ச-22,66)





சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரின் முழுமையான நிதிப் பங்களிப்பில் வவுனியா கணேசபுரம் திருமூலர் அறநெறிப் பாடசாலையில், புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் கலந்து கொண்டு புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டுவைத்தார். (ச-22,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மக்கள் நலனுக்கு முன்னுரிமை கொடுங்கள்

கடந்தசில நாள்களாக வடக்கு மட்டுமன்றி முழு நாட்டின் கவனத்தையும் ஈர்த்திருந்தது சாவகச்சேரி ஆதார மருத்துவமனை. அந்த மருத்துவமனைக்கு பதில் மருத்துவ அத்தியட்சகர் ஒருவர் நியமிக்கப்பட்டதும், அதன்பின்னர் நடந்த சம்பவங்களும் அனைவரும் அறிந்தவையே. இப்போது அந்தச் சலசலப்புகள் அடங்கி, மருத்துவமனைக்குப் புதிதாக ஒரு பதில் மருத்துவ அத்தியட்சகர் நியமிக்கப்பட்டிருந்தாலும் - கடந்த சில நாள்களாக நடந்த சம்பவங்கள் பலவற்றை உணர்த்திச் சென்றிருக்கின்றன. மருத்துவமனையின் பதில் அத்தியட்சகராக நியமிக்கப்பட்ட மருத்துவர் இ.அர்ச்சுனா - மருத்துவமனையில் நடந்த ஊழல்கள், கிடப்பில் போடப்பட்டிருந்த வளங்கள் தொடர்பான தகவல்களைப் பகிரங்கப்படுத்த ஆரம்பித்த பின்னரே பிரச்சினை ஆரம்பித்தது. அவர் சார்ந்த துறை சார்ந்தவர்கள் போர்க்கொடி தூக்கி, அவரை அங்கிருந்து அகற்ற முயன்றதை அடுத்து பிரச்சினை பூதாகரமானது. திருப்தியற்ற சுகாதார சேவையால் நொந்துபோயிருந்த அந்தப் பகுதி மக்கள் - மருத்துவர் அர்ச்சுனாவின் சொல்லைத் தாண்டிய செயல்களால் கவரப்பட்டு அவருக்கு ஆதரவாகப் போராட்டங்களில் இறங்கினர். மக்களின் கோரிக்கைகளைத் தாண்டி இப்போது மருத்துவர் அர்ச்சுனா கொழும்புக்கு அழைக்கப்பட்டிருக்கின்றார். இந்த இடைவெளிக்குள், தடாலடியாக சாகவச்சேரி மருத்துவமனையின் பதில் மருத்துவ அத்தியட்சகராக வேறொருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார். இந்தப் பதவி புதியவருக்கு நிச்சயமாக பஞ்சணை மெத்தையாக இருக்கப்போவதில்லை. எப்போதும் அவர் முட்பாதையிலேயே பயணிப்பவர் போல அவதானத்தோடு இருக்கவேண்டும். இல்லாவிட்டால் என்ன நிகழும் என்பதை கடந்த இருநாள்களாக அங்கு வெடித்த மக்கள் எழுச்சி புலப்படுத்தியிருக்கும்.

சாவகச்சேரி மருத்துவமனையில் பதவி நிலைகளுக்கான முகங்கள் மாற்றப்பட்டிருந்தாலும், மருத்துவர் அர்ச்சுனாவால் கூறப்பட்ட - வெளிப்படுத்தப்பட்ட விடயங்களுக்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை. அவரால் வெளிப்படுத்தப்பட்ட ஊழல்கள் தொடர்பான தகவல்கள், முறைகேடுகள் தொடர்பான விவரங்கள், வளங்களை வீணடித்தமை தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கான பதில்களை மக்கள் இன்னமும் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றனர். மக்களின் இந்த எதிர் பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு புதிதாகக் கடமையேற்றுள்ள பதில் அத்தியட்சரின் கைகளிலேயே இருக்கின்றன. மருத்துவர் அர்ச்சுனாவால் கூறப்பட்டவற்றை - பிரபலமாவதற்காகப் பயன்படுத்தப்பட்ட உத்தி என்று கூறி இலகுவில் கடந்து சென்றுவிட முடியாது. அவரின் குற்றச்சாட்டுகளில் - அவர் வெளிப்படுத்திய தகவல்களில் ஏதோவொரு உண்மை இருக்கின்றது என்பதை உணர்ந்ததாலேயே மக்களின் ஆதரவு அவர் பக்கம் சாய்ந்தது. மருத்துவமனையின் சேவை வழங்கும் தரம் மக்களின் எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்யவில்லை என்பதே மக்களின் திரட்சிக்குக் காரணமாக இருந்திருக்கின்றது. அதை உணர்ந்து மருத்துவமனையால் வழங்கப்படும் சேவைகளின் தரத்தை உயர்த்த வேண்டிய கடப்பாடும் புதிதாகப் பதவிக்கு வந்துள்ளவருக்கு இருக்கின்றது.

அவற்றைச் செயல் வடிவப்படுத்தும்போது, மருத்துவர் அர்ச்சுனாவுக்கு ஏற்பட்ட நெருக்குதல்கள் புதிதாகப் பதவியேற்றவருக்கும் ஏற்படலாம். அவற்றையெல்லாம் தாண்டிச் செயற்படவேண்டிய பொறுப்பு அவர் தலைமேல் இருக்கின்றது. நெருக்கடிகளைத் தவிர்க்க கைக்கொள்ளப்பட்ட காணாது இருக்கும் போக்கே ஊழல்களும், முறைகேடுகளும் பெருக முதற்காரணம் என்பதைப் புரிந்துகொண்டு, புதிதாகப் பொறுப்பேற்றவர் மக்கள் நலன் நோக்கி நடக்கவேண்டும். அதேபோன்று, மருத்துவர் அர்ச்சுனாவுக்கு கொடுத்ததைப் போன்ற இடையூறுகளை, புதிதாக நியமிக்கப்பட்ட பதில் மருத்துவ அத்தியட்சகருக்கு கொடுக்காமல், மருத்துவமனையை மக்கள் நலன் பேணும் வகையில் இயங்கச் செய்வதற்கான ஒத்துழைப்பை மேலதிகாரிகளும் வழங்கவேண்டும். சாவகச்சேரி மருத்துவமனையில் அந்தப்பிராந்திய மக்கள் தமக்கான சகல மருத்துவத் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கா[illegible] ஏற்பட வேண்டும். மக்களின் எதிர்பார்ப்பும் அ[illegible]




# 14 துறைகளுக்கு விரைவில் வரி

கொழும்பு, ஜூலை 10

**இது வரையில் கவனம் செலுத்தாத 14 துறைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி அவற்றிலிருந்து வரி அறவீடு செய்யப்படவுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.**

கடந்த ஆண்டு, 14 துறைகள் வரி செலுத்துவதற்காக கட்டாயம் பதிவு செய்யவேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

மேலதிக வகுப்புகள், தனியார் பாடசாலைகள், தனியார் மருத்துவ சேவைகள், பொறியியல் சேவைகள், நில அளவை சேவைகள் உள்ளிட்டவை இந்த 14 துறைகளில் அடங்குகின்றன. 14 துறைகளின் மூலம் பதிவுசெய்யப்பட்ட அனைவரின் வருமானம் குறித்து உள்நாட்டு வருமான வரித்திணைக்களம் ஆராய்ந்து வருகின்றது என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-இ)

*போதைப்பொருள் கைதுகள்*

## கடந்த வாரத்தில் மட்டும் யாழில் 130 வழக்குகள்

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ். பொலிஸ் பிராந்தியத்துக்குட்பட்ட 9 பொலிஸ் பிராந்தியங்களிலும் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி முதல் ஜூலை 5 ஆம் திகதிவரையான காலப் பகுதியில் 130 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

அண்மையில் நடைபெற்ற யாழ். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் யாழ். மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

குறித்த காலப்பகுதியில் 140.810 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதுடன் 13 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

ஹெரோய்ன் 28.8 கிராம் கைப்பற்றப்பட்டதுடன் 34 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

அதேபோன்று சுமார் 27 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் 21 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

348 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதுடன் அதுதொடர்பில் 34 வழக்குகளும் சுமார் 720 கிராம் மாவா பாக்கு கைப்பற்றப்பட்டதுடன் அதனை உடைமையில் வைத்திருந்தமை தொடர்பில் 28 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ச-125)

## இனி இலத்திரனியல் பயணச்சீட்டு

கொழும்பு, ஜூலை 10

தொடருந்து உள்ளிட்ட பொதுப் போக்குவரத்து பயணச்சீட்டுகளைக் கொள்வனவு செய்வதற்கு இலத்திரனியல் விநியோகமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. போக்குவரத்து மற்றும் அதிவேக வீதிகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் கங்கநாத் ரூபசிங்க இதனைத் தெரிவித்தார். இந்த இலத்திரனியல் விநியோகமுறை இவ்வருட இறுதிக்குள் அறிமுகப்படுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## ரஹீமுக்கு பிடியாணை

கொழும்பு, ஜூலை 10

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு புத்தளம் மேலதிக மாவட்ட நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனமொன்றுக்குச் சொந்தமான கட்டடமொன்றுக்குள் அத்துமீறிநுழைந்து சொத்துகளை சேதப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ச-இ)

## மாணவனை தாக்கிய அதிபர், ஆசிரியர் கைது

நுவரெலியாவில் தேசிய பாடசாலையொன்றில் உயர்தரப் பிரிவில் கல்வி கற்கும் மாணவனைத் தாக்கிய குற்றச்சாட்டில் பாடசாலை அதிபர், மூன்று ஆசிரியர்கள் உட்பட 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார்தெரிவித்தனர். பெற்றோரின் முறைப்பாட்டின் பிரகாரம் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மாணவனின் தலைமுடி அதிகமாக வளர்ந்திருந்த காரணத்தாலேயே மாணவனை அவர்கள் தாக்கியதாகக் கூறப்படுகிறது. (ச-இ)

**நாளை**

11.07.2024

வியாழக்கிழமை - ஆனி - 27

சுபநேரம் : 07.29 - 08.59

ராகுகாலம் : 01.29 - 02.59

**நாளொரு நல்வார்த்தை**

**தன்னை அதிக புத்திசாலியாக எண்ணுவதே மனிதனிடம் உள்ள மிகப் பெரிய பலவீனம்.**

- சிம்மன்ஸ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 . 11 . 1941

மறைவு 22 . 06 . 2023

**அமரர் கதிரவேலு துரைராசா**

(ஓய்வுபெற்ற புகையிரத பாதுகாப்பு உத்தியோகத்தர்)

ஆண்டொன்றானாலும் - அப்பா
நீங்கள் எம் குடும்பத்தின் ஆலமரம்
காலச்சுழற்சியில் காலன் உங்களை
காவு கொண்டாலும்
காலம் உள்ளளவும் நீங்கள் எங்கள்
காவல் தெய்வம்

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்
021 223 0615

(CS/898) J-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

# மரண அறிவித்தல்



தோற்றம் 05 . 02 . 1942

மறைவு 09 . 07 . 2024

## மருதமுத்து தனலக்ஷ்மி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இல 10, 1ம் ஒழுங்கை பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட மருதமுத்து தனலக்ஷ்மி நேற்று (09.07.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாவு - செல்லம்மா தம்பதியரின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - பாப்பம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற மருதமுத்து அவர்களின் அன்பு மனைவியும், நாகரெத்தினம், சந்திரசேகர், முரளிதரன், செந்திமதி, விக்னராஜா, சண்முகராஜா, பார்த்தீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சுப்பம்மா, எசக்கி, கனேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.07.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

மருதமுத்து சந்திரசேகர் (மகன்) 077 777 0916
சேகர் ஐஸ்கோன் 077 873 6561
சேகர் ஐஸ்கிறிம் 077 777 0916

(CS/55636) J-1

## வாடகைக்குத் தேவை

விவசாய தேவையின் நிமித்தம் உழவு இயந்திரத்துடன் (Tractor) 3 வகையான கலப்பை மற்றும் பெட்டியுடன் வாடகைக்குத் தேவை.

**077 210 7471**

## வீடுகளுக்கு வந்து கற்பித்தல்

ஆங்கிலம் / தமிழ் மொழி மூலம்,
தனி/ குழு வகுப்புக்கள், GR 6-13 வரை
கணக்கீடு, புவியியல், குடியியல்,
வரலாறு, சிங்களம், ஆங்கிலம்.

**077 331 6402**

# வருஷாப்திய நினைவு தினம்



பிறப்பு 01 . 05 . 1968

இறப்பு 23 . 06 . 2023

**அமரர் சிவஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள் வாசுதேவ சர்மா**

ஆண்டு ஒன்று கடந்து சென்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம் குடும்பம் என்ற கோயிலில்
குலவிளக்காக திகழ்ந்த எங்கள் தெய்வமே!
மாண்டாலும், மறையாது
உங்கள் நினைவு என்றென்றும்.

21/2 Saiva School Lane,
Kondavil west, Kondavil, Jaffna

பிரிவால் துயருறும்
பத்மாவதி அம்மா
077 371 5777

(CS/55627)

# மரண அறிவித்தல்



## திருமதி றெஜினா றீற்றா சிவஞானம்

இல.222 குருசோ வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், Neuss Germany யை வதிவிடமாகவும் கொண்ட திருமதி றெஜினா றீற்றா சிவஞானம் அவர்கள் கடந்த 01.07.2024 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.07.2024) புதன் கிழமை பிற்பகல் 15.00-18.00 மணிக்கிடையில் Hahn BestrHungen Julicher Str 43, 41464 Neuss இல் பார்வைக்காக வைக்கப்பட்டு நாளை (11.07.2024) வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் Church Hauptfriedhof, Neuss, Rheydter Str 191 41464 Neuss இல் நல்லடக்கம் செய்யப்படும்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஜோர்த்துராணி பாலச்சந்திரன்
(அக்கா)

(CS 899) V-1

தென்னியன்குளம் விபத்தில்:

# காயமடைந்தவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஜூலை 10

முல்லைத்தீவு துணுக்காய் பகுதியில் கடந்த 4ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் காயமடைந்தவர், சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார். சின்னத்துரை பாஸ்கரன் (வயது -48) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேசன் வேலைக்காக உயிலங்குளம் வீதி ஊடாக தென்னியங்குளம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த போது ஏற்பட்ட விபத்தில், மேற்படி நபர் படுகாயமடைந்திருந்தார். அவர் கிளிநொச்சி மருத்துவமனையில் வழங்கப்பட்ட முதற்கட்ட சிகிச்சைகளின் பின்னர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் கடந்த 7ஆம் திகதியன்று சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார்.

(ம-19)

# விபத்தில் காயமடைந்த முதியவர் உயிரிழப்பு!

யாழ்., ஜூலை 10

விபத்தில் படுகாயமுற்று மயக்கமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த முதியவர் ஒருவர் சிகிச்சை பயனின்றி பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.

அல்வாய் கிழக்கு, அல்வாயைச் சேர்ந்த சுப்ரமணியம் சிவபாதசுந்தரம் (வயது -80) என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார்.

(ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவமடு வள்ளுவர்புரத்தில் தும்புத்தொழிற்சாலையில் தீ





முல்லைத்தீவு, ஜூலை 10

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட் பட்ட விசுவமடு- வள்ளுவர்புரம் பகுதியில் அமைந்துள்ள தும்பு உற்பத்தி தொழிற்சாலை யில் நேற்றுத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப் பட்டு தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

வள்ளுவர்புரம் பகுதியில் பெண்களால் சிறு கைத்தொழில் நிறுவனமாக நடத்தப் படும், தொழிற்சாலையே இவ்வாறு தீ விபத்துக்குள்ளாகி யுள்ளது. 12 இலட்சம் ரூபா பெறுமதியான தும்புகள் எரிந்தழிந் ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-113-19)

# புங்குடுதீவில் நேற்று வீடொன்று தீக்கிரை

யாழ்ப்பாணம், ஜூலை 10

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தில் வீடொன்று தீக்கிரையாகியுள்ளது.


வீட்டில் இருப்பவர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்த நிலையில் நேற்று மாலை இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

வீடு பகுதியளவில் எரிந்துள்ளதுடன் ஓட்டுக் கூரையும் கீழிறங்கியுள்ளது. தளபாடங்களும் சேதம் அடைந்துள்ளன. தீ பரவலுக்கான காரணம் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ- 125)






# இலங்கையின் இளம் தொழில்முனைவோரை வலுவூட்டும் நோக்கில் 'Unveil the Dream 2024' எனும் நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றது இலங்கை வங்கி



நாட்டின் பொருளாதார வளாச்சியையும் புத்தாக்கத்தையும் வலுவூட்டும் நோக்கில் இலங்கை வங்கியானது "Unveil the Dream 2024" எனும் இளந் தலைமுறை தொழில்முனைவோருக்கான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது. நாடு முழுவதுமுள்ள இளம் தொழில்முனைவோருக்கு அவர்களின் கனவுகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் உதவிகளை வழங்கி அதனூடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதே இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, கைத்தொழில் அபிவிருத்திச் சபை, சிறியளவிலான வியாபார அபிவிருத்திப் பிரிவு, தேசிய வியாபார அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றின் ஆதரவுடன் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்நிகழ்ச்சித் திட்டம் இளம் தொழில்முனைவோருக்கு அவர்கள் உலகச் சந்தையில் சிறந்து விளங்குவதற்குத் தேவையான அறிவு, வளங்கள், வலையமைப்பு வாய்ப்புகள் என்பவற்றை வழங்கவுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது வியாபாரத்துறையின் முன்னோடிகளையும் எதிர்கால வியாபாரத்துறையில் சிறந்து விளங்கப்போகும் தொழில் முனைவோரையும் ஒன்றிணைத்து இலங்கையின் எற்றுமதிச் சந்தையை விரிவுபடுத்துவதற்கான புத்தாக்கம் மிகு உத்திகள், தீர்வுகள் குறித்து உரையாடும் வாய்ப்பையும் வழங்கவுள்ளது. இதில் நிதிமுகாமைத்துவம், சந்தை ஆய்வு, உற்பத்தி அபிவிருத்தி முதலான துறைகளில் பாண்டித்தியம் மிக்க வளவாளர்களினால் நடைமுறைசார் அறிவுரைகளும் பெறுமதிமிக்க ஆலோசனைகளும் வழங்கப்படும்.

இலங்கை வங்கியின் அபிவிருத்தி வங்கியியல் மற்றும் கிளைக் கடன் செயற்பாடுகள் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளர் திரு. RMN ஜீவந்த இது தொடர்பில் கூறுகையில் 'நாம் எமது இளம் தொழில்முனைவோரின் ஆளுமைகளை வளர்த்தெடுப்பதில் உறுதிபூண்டுள்ளோம். இவ்வாறான நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக நாம் எமது சந்ததியாளர் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேடுத்துச் செல்லத் தேவையான அறிவையும் திறன்களையும் வளர்த்துக்கொள்வதற்கான வாய்ப்புகளை நாம் வழங்குகின்றோம்' எனக் கூறினார்.

2024ஆம் ஆண்டுக்கான உலக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரத்துறை நாளை முன்னிட்டு நடத்தப்படும் "Unveil the Dream 2024" நிகழ்வில் இளம் தொழில் முனைவோரை ஈடுபடச் செய்யவும் வலுவூட்டவும் என வடிமைக்கப்பட்ட பல நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. இலங்கையின் பேண்தகு அபிவிருத்திக்குப் பங்களிக்கும் வகையில் புத்தாக்கத்தையும் தொழில்முயற்சித் திறனையும் போற்றி வளர்ப்பதற்கு இத்திட்டம் எதிர்பார்த்துள்ளது. இலங்கை வங்கியின் "Unveil the Dream 2024" நிகழ்ச்சித்திட்டத்தினூடாக தமது கனவுகளை நனவாக்கவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கவும் எதிர்பார்த்துள்ள ... கைகோர்ப்பதில் இலங்கை வங்கி பெருமை கொள்கின்றது.

இலங்கை வங்கியானது கடந்த 84 ஆண்டுகளுக்கும் மேலாக தனிநபர்களுக்கும் வியாபாரங்களுக்கும் உலகளாவிய வாய்ப்புகளை வழங்கி இலங்கையின் நிதித் துறையில் ஒரு முன்னோடியாக இருந்து வருகிறது. தீவு முழுவதும் உள்ள அதன் 2000இற்கு மேற்பட்ட பரவலான சேவை மைய வலையமைப்பும் அதன் அதிநவீன தொழில்நுட்பங்களும் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு பரந்த அளவிலான நிதிச் சேவைகளை வழங்கி வருகின்றன. 2023ஆம் ஆண்டு ஐக்கிய இராச்சியத்தின் 'த பேங்கர்' சஞ்சிகையால் உலகின் அதிசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாகவும் இலங்கையின் ஆகச்சிறந்த வங்கியாகவும் கௌரவிக்கப்பட்ட இலங்கை வங்கி 'பிராண்ட் பினான்ஸ் லங்கா' நிறுவனத்தால் இலங்கையின் முதற்தர வங்கி எனவும் 2024ஆம் ஆண்டுக்கான SLIM KANTAR மக்கள் விருதுகள் நிகழ்வில் இந்த ஆண்டுக்கான மக்கள் வங்கிச் சேவை வணிக நாமம் எனவும் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இலண்டனிலுள்ள வங்கித் துணை நிறுவனம் உட்பட சென்னை, மாலே, ஹுலுமாலே மற்றும் சீஷெல்ஸ் ஆகிய வெளிநாட்டுக் கிளைகளுடன் வலுவான சர்வதேச வியாபகம் கொண்ட நிறுவனமாகத் திகழும் இலங்கை வங்கியானது நாட்டு மக்கள் அனைவரையும் உள்ளடக்கிய நிதி உதவிகளை வழங்குவதிலும் நாட்டின் வளர்ச்சியையும் வளத்தையும் கட்டி எழுப்புவதிலும் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியும்
நன்னடத்தையும்
ஒரு மனிதனை
நல்லவனாக்குகிறது


- அரிஸ்டோட்டில்

புதன் பொய்கை

10.07.2024
புதன்கிழமை

## 21ஆம் நூற்றாண்டுக்கான

# பாடசாலையும் ஆசிரியரும்



நடேசு தயாளன்

இன்றைய மாற்றமடைந்துவரும் உலகில், எண்முறைகளால் ஒன்றோடுஒன்று தொடர்பு பட்ட உலகின் அங்கத்தவர்கள் வாழ்வில் வெற்றியடையவேண்டுமானால், பாடசாலைக் காலத்தில் அவர்கள் புதிய அறிவையும் திறன்களையும் பெற்றவர்களாக விளங்குதல் அவசியமானது. 20ஆம் நூற்றாண்டுக்கான வாழ்க்கைத் திறன்களானவை தற்காலத்திலும் பார்க்க மாறுபட்டதாகும் பிள்ளைகளை வகுப்பறைச் செயன்முறைகளில் வெற்றியடையச் செய்தல் என்பதற்கப்பால் வாழ்க்கைச் செயன்முறையில் வெற்றியடையச் செய்தல் என்பது மிகவும் அவசியமானதாகும்.

உலக இயங்கியற் செயன்முறையில் இணைந்துகொள்ளும் இன்றைய காலக் கற்போன் சிறந்த பிரயையாக, விமர்சனப்பாங்கான சிந்தனையாளனாக, தகவல் தொடர்பாடற் தேர்ச்சியுள்ளவனாக உலகச் செயன்முறையின் தேவையினை அறிந்தவனாக சிறந்த தொடர்பாடற் கோலத்தினைக் கொண்டவனாக விளங்குதல் அவசியமானதாகும்.

### 21ஆம் நூற்றாண்டில் கல்வியின் தன்மை?

21ஆம் நூற்றாண்டுக் கல்வியானது எவ்வாறு கற்க வேண்டும் என்பதனை எடுத்துக்கூறுவதாய் இருக்க வேண்டும். ஆக்கச் சிந்தனை கூட்டிணைவினையும் விமர்சனப்பாங்கான சிந்தனைக் கோலத்தினையும் கட்டியெழுப்புவதற்குக் கற்பிப்பதாக இருக்கவேண்டும். பிள்ளைக்குக் கற்பிக்கும் போது எவ்வாறு தொடர்பாடலை மேற்கொள்வது என்பதற்கப்பால் வினைத்திறனான தொடர்பாடல் தொடர்பில் உணர்த்துவதாகவும் இருக்கவேண்டும். இத்தகைய திறன்களையே பிள்ளைகள் இன்று வளர்க்கவேண்டியவர்களாக உள்ளனர். இதன்மூலமே இன்றைய நிலையில் மட்டுமல்லாது எதிர்கால இயங்கியல் தொழில் உலகிலும் தன்னை நிலை நிறுத்துவதற்கு கல்வி உதவுவதாக இருக்கும். கடந்த நூற்றாண்டுக் காலப்பகுதியிலும் பார்க்க 21ஆம் நூற்றாண்டுக்கான கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள் விரைவாக மாற்றமடைந்துள்ளன. உலகளாவிய அபிவிருத்திச் செயன்முறையின் மாற்றங்களானவை புதிய வகையிலான கற்றலுக்கான தேவையினை ஏற்படுத்தியுள்ளன. உலகச் சவால்களை வெற்றிகொள்ளத்தக்க வகையில் முறையான கல்வி மாற்றமடையவேண்டியுள்ள நிலையில் புதிய வடிவிலான மாற்றங்கள் வேண்டப்படுவதாயுள்ளது. இதன் காரணமாக கடந்த நூற்றாண்டின் கற்பித்தற் சிந்தனையில் இருந்தும் மாறுபட்ட வகையில் செயற்பாட்டு முறையிலான கற்பித்தல் முறைக்குச் செல்லவேண்டியவர்களாக ஆசிரியர்கள் உள்ளனர்.

உலகமயமாக்கல் செயன்முறையின் பின்னணியிலேயே 21ஆம் நூற்றாண்டுக்கான கல்விச்சூழல் வடிவமைக்கப் படவேண்டியுள்ளது. இங்கு அறிவு வேலைச் செயன்முறை மற்றும் முயற்சியாண்மை என்பன முக்கியத்துவம் உடையதாகும். பாடசாலையை விட்டு நீங்குவோரது கல்வியிலும் திறன் அபிவிருத்தியிலும் அதிகரித்தளவிலான கேள்வியினை உலகமயமாக்கலும் தொழில்நுட்ப மாற்றங்களும் ஏற்படுத்தியுள்ளன.



முன்னைய காலங்களில் பாடசாலையை விட்டு நீங்குவோரிலும் பார்க்க தற்காலத்தில் பாடசாலைக் கல்வியை விட்டு நீங்குவோரிடம் அதிகரித்தளவிலான தொழிற்றிறன் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே ஆரோக்கியமான உற்பத்தித்திறன் எதிர்கால வேலையுலகில் நின்று நிலைத்திருக்கக் கூடிய திறன்கள் உடையவர்களாக்குவதற்கான ஊக்குவிப்புகள் கற்றல் கற்பித்தற் செயன்முறைமூலம் இடம்பெறவேண்டும். 21ஆம் நூற்றாண்டுக்கான கற்றல் என்பது பிள்ளைகளானவர்கள் கற்கும் முறைகளுடனும் வளங்களுடனும் உலகளாவிய ரீதியில் தொடர்புடலைக் குறித்து நிற்கின்றது. இங்கு அவர்கள் தாமாகவே பிரச்சினை தீர்க்கும் வல்லமையுள்ளவர்களாகவும் தமது கற்றற் செயற்பாட்டினைத் தாமே கட்டியெழுப்புபவர்களாகவும் பொருத்தமான தொடர்பாடற் செயன்முறையினூடாக ஏனையவர்களுடன் கூட்டிணைந்து செயற்படுபவர்களாகவும் ஆக்கமலர்ச்சிச் சிந்தனை உடையவர்களாகவும் விரைவாக மாறும் சூழல்நிலமைகளுக்குள் தம்மைப் பொருத்திக் கொள்பவர்களாகவும் காணப்படுவர்.

கல்விச் செயன்முறையின் மூலம் அதிகரித்தளவிலான கல்வியினை வழங்குவதோடு தொடர்ச்சியான வலுவூட்டற் செயன்முறைகளும் இடம்பெறவேண்டியது அவசியமாயுள்ளது. இங்கு உலக மயமாக்கற் செயன்முறைக்கு இணைந்த வகையில் சமூக மாற்றங்களும் ஏற்படுத்தப்படுவது அவசியமானதாயுள்ளது. தமது எதிர்காலச் சவால்களை வெற்றிகொள்ளக்கூடிய சமநிலை ஆளுமைத்திறன்கள் உடையவர்களையும் சமூகத்துக்காக வளர்க்க வேண்டியது அவசியமானதாகும்.

21ஆம் நூற்றாண்டுக்கான கற்றல் என்பது மாணவனை நிபுணத்துவம் மிக்கவனாக மாற்றும் தன்மையது. இங்கு பிரச்சினை தீர்க்கும் திறன் விமர்சன ரீதியான சிந்தனைத் திறன் எண்முறைமைகள் சார்பான திறன்கள் (டிஜிற்றல்) நியமத் தொழில்நுட்பத்திறன் சேர்ந்தியங்கும் திறன் என்பவற்றின் மூலம் எதிர்கால உலகில் ஓர் உன்னத சமூகப் பிரஜையாக வாழமுடிதலைக் குறித்து நிற்கின்றது. இதற்காக மாறும் தொழில்நுட்ப உலகில் வாழக்கூடிய நிலையினைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய திறன்களையும் பெற்றுக்கொடுக்கவேண்டும்.

### இன்றைய காலகட்ட வகுப்பறைக் கற்றல்

மேற்கூறப்பட்டவற்றினை அடைந்து கொள்வதற்காக இன்றைய வகுப்பறைக் கற்றல் கற்பித்தலானது பின்வருவனவற்றினை உள்ளடக்கியதாக அமைந்து காணப்பட வேண்டும்.

1. கற்பித்தற் தந்திரோபாயங்களானது கற்கும் அனைவருக்கும் கையாளக்கூடியதாக இருக்கவேண்டும். இங்கு கற்கும் ஒவ்வொருவரும் தமது இயலுமைக்கும் கற்றலுக்கான ஆயத்த நிலைக்குமேற்ப கற்றலில் ஈடுபட வாய்ப்பளிக்கப்படல் வேண்டும்
2. நவீன கற்பித்தற் தொழில்நுட்பத்திறன்களை வகுப்பறையில் முன்னெடுத்துச் செல்லக் கூடியதாயிருத்தல் வேண்டும்.
3. மாணவர்கள் மற்றும் ஏனையோருடன் நேரான உறவுநிலையினை வளர்க்கக் கூடிய திறன் அவசியமானது. வகுப்பறைச் செயற்பாட்டில் ஆர்வத்துடனான பங்குபற்றுதலுக்கு உதவக்கூடிய வகையிலான ஆளிடைத்திறன் விருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்போது ஆசிரியர் - சகபாடிகள் என்போருக்கிடையிலான தொடர்பின் அதிகரிப்பானது புதிய அறிவு உருவாக்கத்துக்குப் பங்காற்றுவதாக இருக்கவேண்டும்.

பிள்ளைகளிடையே முற்போக்கான சிந்தனைத்திறன் விருத்தி என்பது அவசியமானதாகும். இதன்மூலம் மாறுபடும் உலகின் தொழில்நுட்ப மாற்றங்கள் சவால்களை வெற்றி கொள்வதற்கான முற்திட்டங்களை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

### பாடசாலைகளின் வகிபங்கு

21ஆம் நூற்றாண்டுத் திறன்களுக்கான கற்றல் செயற்பாடுகள் தொடர்பில் பாடசாலை பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தவேண்டியுள்ளது.


1. உயர் தொழில்நுட்பம் நிறைந்த திறன்களைப் பெறுவதற்கான தயார்ப்படுத்தல்களைப் பாடசாலை எவ்வாறு மேற்கொள்கின்றது. அல்லது மேற்கொள்ளவேண்டும்.

2. பாரம்பரியமான கற்றல் முறைகளுக்கப்பால் முறைசாராவகையில் சுதந்திரமான கற்றலை எவ்வாறு மேற்கொள்ளச் செய்தல்


3. தொழில் நுட்பத்தினைக் கற்றலுக்காக எவ்வாறு பயன்படுத்துவது வகுப்பறை நிலமைகளில் அதன் பயன்பாட்டு நிலை எத்தகையது என்பது தொடர்பில் கவனம் செலுத்துவதாக இருக்கவேண்டும். எனவே பிள்ளையினுடைய உளவியல் ரீதியான சமூக ரீதியான தேவை ஒழுங்குகளை தெளிவாக அறிந்து அதற்கேற்ப கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைத்துக் கொண்டால் அதியுயர் கற்றல் அடைவுகளை அடைந்து கொள்ளமுடியும். ஆரோக்கியமான ஜனநாயகத் தன்மை கொண்டதும் நேர்மயமானதும் அச்சுறுத்தலுமற்ற கற்றலுக்கு உதவுதல் என்பது தொடர்பில் கல்வி நிர்வாகிகள் அதிபர்கள்; ஆசிரியர்கள் என்போர் கவனம் செலுத்திச் செயற்படுதல் அவசியமானதாகும் மேற்குறித்த பிரிவினர் தமது செயற்பாடுகள் தொடர்பில் சுயமதிப்பீடுகளை மேற் கொள்வது என்பது காலத்தின் தேவையாகவுமுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# புற்றுநோயின் பொருண்மியப் பாதிப்பை சரிசெய்யப் பாடுபடும் Fadna நிறுவனம்





இன்றைய உலகில் புற்றுநோய் ஒரு முக்கியமான உடல்நலப் பிரச்சினையாக மாறியுள்ளது. தற்போது, இலங்கையில் வருடாந்தம் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய வழக்குகள் பதிவாகி, நிலைமையை மேலும் மோசமாக்குகிறது. வேகமாக வளர்ந்து வரும் இந்த புற்றுநோய் பாதிப்பு, நோயாளிகளுக்கு மட்டுமல்லாது அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் நிதி மற்றும் மன அழுத்தத்தை ஏற்படுத்தும் விடயமாக மாறியுள்ளது.


மன உளைச்சல், வீட்டில் அதிகப் பொறுப்புகள், பொருளாதாரச் சிக்கல்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்விப் பயணத்தில் சிக்கல் ஏற்படும் பல நிகழ்வுகளை இங்கு காணலாம்.

அதன்படி, Fadna நிறுவனம் தனது Vernolac தயாரிப்பின் லாபத்தைப் பயன்படுத்தி மாணவர்களின் வாழ்வின் பெறுமதிமிக்க மைல்கல்லாக இருக்கும் உயர்தரப் பரீட்சைக்கு அவர்களை ஊக்குவிப்பதன் மூலம் அவர்களின் எதிர்காலத்தை பிரகாசமாக்குகிறது. Fadna Vernolac அஸ்பிரேஷன் ஸ்காலர்ஷிப் திட்டம் என பெயரிடப்பட்ட அதன் ஒத்துழைப்பு ஒப்பந்தம் 2024ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதியன்று கங்காராம ரஜமஹா விஹாரையில் அனைத்து மதத் தலைவர்கள் முன்னிலையில், Fadna நிறுவனத்தின் மானியம் மற்றும் மொரட்டுவை நியூ ஹொரைசன் லயன்ஸ் கிளப்பின் ஒத்துழைப்புடன் செய்யப்பட்டது. இரண்டு தசாப்தங்களாக கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்து அறிமுகப்படுத்தப்பட்ட 4 புத்தம் புதிய தயாரிப்புகளுடன் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெற்ற பிரபல வர்த்தக நாமமான Fadna Vernolac தயாரிப்பின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை Fadna Vernolac பேராண்மை உதவித்தொகை திட்டத்துக்கு ஒதுக்குகிறது. Vernolac ஆஸ்பிரேஷனல் ஸ்காலர்ஷிப் திட்டம் அதன் சமூகப் பொறுப்பில் மற்றொரு படியாகும்.

# ஓ!! என் பிரியமே...!

கயூரி புவிராசா

வாகாய் சாய்த்துக்கொள்ளும்
சாளரக் கண்ணாடிகளுக்கு பிறகு
முழு வானின் நட்சத்திரங்கள்
எண்ண வாய்க்கும் உன் மடி
ஒருதடவை நெக்குருக அணைத்தபடி
நெஞ்சோடு தீரும் பேரழுகை
புயலடித்த கடலின் அமைதியாய்
நிறையும்
நினைவுகளில் நீந்தி திரியும்
பறவைகளின்
வலசைக் கனவுகளில்
இராக்கால குறிப்புகள்
மலைச்சரிவில் கைவழுக்கிய சிராய்ப்புகளில்
கசியும் குருதிப் பிசுபிசுப்பு
வலுக்கட்டாயமாக
வெறுமையின் கசப்புகளை
பூசி அழிக்கும் இந்தக் குரலும் மொழியும்
உனக்கு புதிது



# தன் அடியவர்களை கண்ணெனக்காக்கும் கண்ணலிங்கேஸ்வரர்

சி.ஸ்ரீஜீவா - செயலாளர்



வட்டுக்கோட்டை கிராமத்தில் தெக்கணப்பாய் பதியினில் வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் மக்கள் பசிபோக்கும் நெல்வயல்கள் சூழப்பெற்ற கிராமத்தில் குடிகொண்டுள்ளார் கண்ணலிங்கேஸ்வரர் பெருமான்.

கண்ணகி அம்மனுடனும், மீனாட்சி அம்மனுடனும் பிள்ளையார், முருகன், சண்டேஸ்வரர், நவக்கிரகத் தெய்வங்கள், வைரவர், கிருஷ்ணர், லிங்கேஸ்வரர், தட்சணாமூர்த்தி ஆகிய தெய்வங்கள் பரிவாரமூர்த்திகள் வீற்றிருக்க எழுந்தருளியிருந்து பக்தர்களின் குறைகளை நிவர்த்தித்து வருகின்றார்.

ஆலய வடக்கு வீதியில், மூன்று கேணியும், தீர்த்தம் ஆடிவரும் தெய்வம் இளைப்பாறிச் செல்லவென நான்கு கால்களைக்கொண்ட ஒரு மடமும் ஆலயத்தில் அமையப்பெற்றுள்ளது.

அப்படி புதுமையும் பழைமையும் கொண்ட இந்த ஆலயத்தில், கண்ணகி அம்மனுக்கு பங்குனித் திங்கள் இறுதிப் பொங்கல் தினத்தில் ஆலய பித்தர் கேணியில் தீர்த்த உற்சவமும், கண்ணலிங்கேஸ்வரருக்கு ஆனி உத்திரத்தில் தீர்த்த உற்சவமும் இடம்பெறுவது வழமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மிகச்சிறப்புற இடம்பெற்ற

# பச்சிலைப்பள்ளி பண்பாட்டு விழா

■ ஐ.கிருஷ்ணன்

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகமும், பச்சிலைப்பள்ளி கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பிரதேச பண்பாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி பளை மத்திய கல்லூரியின் ஆருக் ஷகிருத்திக் கலையரங்கத்தில், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளரும் பிரதேச கலாசாரப் பேரவைத் தலைவருமான இ.த.ஜெயசீலன் தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பதில் மாவட்டச் செயலர் இ.நளாஜினி சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் பணிப்பாளர் லாகினி நிருபராஜ் ஆகியோர் கலந்துசிறப்பித்தனர்.

கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி பளை மத்திய கல்லூரியின் அதிபர் கு.ரவீந்திரா மற்றும் தம்பகாமம் பிரதேச அண்ணாவியார் கலாபூஷணம் கந்தையா ஆறுமுகம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.





இதன்போது பளை இரட்டைக்கேணி அம்மன் ஆலய விசேட பூசை வழிபாடுகளை தொடர்ந்து பண்பாடு, கலாசாரத்தை வெளிப்படுத்தும் கலைகளுடன் விருந்தினர்கள் விழா மண்டபம் வரை அழைத்து வரப்பட்டனர்.

நிகழ்வில் பல்வேறுபட்ட கலை, கலாசார நிகழ்வுகள் நடைபெற்றதுடன், பிரதேச கலைஞர்கள் மூவருக்கு கலைத்தென்றல் விருதுகளும் நடனக் கலைஞருக்கு இளங்கலைஞர் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

மேலும், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகம் மற்றும் கலாசாரப் பேரவையின் வெளியீடான 'பசுந்துளிர் இதழ் - 9' நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. அத்துடன், தேசிய கலை இலக்கிய போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதம கணக்காளர் சி.கஜேந்திரன், கிளிநொச்சி மாவட்ட பதில் சமுர்த்தி பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், இரட்டைக்கேணி அம்மன் ஆலய பிரதம குரு கனகசபை, பங்குத்தந்தை அன்ரன் ஜோர்ச் அடிகளார், பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, நிதி அனுசரணையாளர்கள், கலைஞர்கள், பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், பிரதேசமட்ட பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள், மாணவர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# கைலைநாதன் கூட்டுறவின் ஒப்பற்ற பணியாளன்

■ நந்தன்



யாழ்ப்பாணத் திருநாட்டில் நீர், நில, வளத்துடன் சிறந்து விளங்கும் அளவெட்டி என்னும் திருக்கிராமத்தில் கல்வியிலும், அறிவிலும் மற்றும் நற்பண்புகளிலும் சிறந்து விளங்கிய வைத்தியலிங்கம் - நாகம்மா தம்பதியரது தவப்புதல்வராக 1956ஆம் ஆண்டு பங்குனி மாதம் பத்தாம் திகதி கைலைநாதன் அவதரித்தார்.

கூட்டுறவுச் சேவையையும், சமூகசேவையையும் தனது ஆயுட்காலம் வரைக்கும் தனது பெரும் பணியாகக் கொண்டு செயற்பட்டார். அத்துடன் ஈழத் திருநாட்டில் சிறந்த சைக்கிள் ஓட்ட வீரனாகச் செயற்பட்ட அவர் தனது ஆயுள் காலம் வரைக்கும் சைக்கிளில் சென்றே தனது பணி மற்றும் சேவைகளை மேற்கொண்டு வந்தார்.

மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றிய அவர் தனது வாழ் நாள் பூராகவும் சமூக சேவைகளை மகத்துவமாக முன்னெடுத்தார்.

வடக்கின் கூட்டுறவு இயக்கத்தை கட்டியெழுப்பவேண்டும் என்ற தியாக மனப்பான்மையுடன் செயற்பட்டு கூட்டுறவு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இலங்கைத் திருநாட்டை சுற்றி சைக்கிள் ஓட்டம் ஒன்றை கடந்த ஆண்டில் மேற்கொண்டார். இவரின் இந்த முயற்சிக்குப் பலத்த ஆதரவு கிடைத்தது. தெற்கில் உள்ள கூட்டுறவு அமைப்புகள் அவரின் சைக்கிள் ஓட்டத்துக்கு மதிப்பளித்தன. அதனைவிட இலங்கைத் தீவின் மிக முக்கியமான சமய ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தார். கூட்டுறவுச்சபை கல்லூரியின் விரிவுரையாளர் மற்றும் வளவாளராகவும் சிறப்பாகச் செயற்பட்டார். அத்துடன் அனேகமான கூட்டுறவு அமைப்புகளில் அயராது சேவையாற்றியும் வந்துள்ளார். இவ்வாறான மிகவும் சிறப்பான கூட்டுறவாளனான கைலைநாதன் கடந்த மாதம் 18ஆம் திகதி இந்த மண்ணை விட்டு மறைந்து சென்றாலும் அவர் கூட்டுறவுக்கு செய்த சேவைகள் என்றும் நிலைத்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர்
சி.யமுனாநந்தா

# முரண்பாடுகளும் இனப்படுகொலையின் படிநிலைகளும்




மானிட சமூகத்தில் வரலாற்றுக் காலம் தொடக்கம் முரண்பாடுகள் மருவிக் காணப்படுகின்றன. முரண்பாடுகளை குழுநிலை, சமூக நிலை, இனநிலை, அயல்நாடுகளுக்கு இடைநிலை, பிராந்தியநிலை, பூகோளநிலை என நோக்கலாம்.

முரண்பாடுகளுக்கு இடையில் சமூக அசைவுக்குச் சட்டம், ஒழுங்கு என்பன இன்றியமையாதவை. முரண்பாடுகளின் முரணறுநிலைகளாக நல்லிணக்கம், வல்லிணக்கம், அல்லிணக்கம் என்பன அமைகின்றன. பலத்தினால் முரண்பாடுகளினை முரணறுத்தல் வல்லிணக்கமாகும். முரண்பாடுகள் முடிவுறுநிலை அல்லிணக்கம் ஆகும். முரண்பாடுகள் தீர்க்கப்பட்டநிலை நல்லிணக்கமாகும்.

நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகள் அதிகரிக்க பிணக்குகள் உருவாகும். இவை வன்முறைகளாக ஒருங்கிய யுத்தமாக, யுத்தமாக பரிணமிக்கும். கடந்த 25 ஆண்டுகளில் உலகின் யுத்தமுனைகளில் பல பெரிய இனப்படுகொலைகள் நிகழ்ந்துள்ளன. இவை உலக வல்லரசுகளின் நிழலிலேயே நிகழ்ந்துள்ளன. இனப்படுகொலைக்கு உள்ளான சமூகம் அதன் தொடர்ச்சியாக கலாசார இனப்படுகொலை, கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை, ஒருங்கிய இனப்படுகொலை என்பனவற்றுக்குள் அழிக்கப்படும்.

அந்த வகையில் ஈழத்தமிழர்கள் 2009ஆம் ஆண்டு பெரும் இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக கலாசார இனப்படுகொலைக்கும் அதன் தொடர்ச்சியாக கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கும் தமிழ்ச்சமூகம் உள்ளாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒருங்கிய இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. ஒருங்கிய இனப்படுகொலை என்பது ஓர் இனத்தை மறைமுகமாக துடைத்தெடுக்கும் செயற்பாடாகும். இதற்காக நேரடியான இராணுவ அச்சுறுத்தலுடன் அரசமைப்பு அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன. இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதித் தேர்தலும் தமிழினத்தை மேலும் பலவீனப்படுத்தும் செயற்பாடாக அமைகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் போது இலங்கையில் தமிழர்களின் பிரச்சினைகள் மறைக்கப்படும்.



**தமிழ் மக்கள் இனப்படுகொலையாளரை ஆதரிக்கும் தேர்தல் சூழல் ஒருங்கிய இனப்படுகொலையின் வடிவமாகும். பூகோள முரண்பாடுகளாக ஒருமுனைவாக்கப்பட்ட வல்லரசுகளின் செயல்கள், கூட்டுச் சேர்ந்த வல்லரசுகளின் செயல்கள், ஒருங்கிய வல்லரசுகளின் செயல்கள் அமைகின்றன.**

எனவே தற்போதைய அரசியல் இராணுவச்சூழ்நிலைகளில் இலங்கையின் அரசியல் அமைப்புக்கு உட்பட தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவது அவசியமானது. தமிழ் மக்கள் இனப்படுகொலையாளரை ஆதரிக்கும் தேர்தல் சூழல் ஒருங்கிய இனப்படுகொலையின் வடிவமாகும். பூகோள முரண்பாடுகளாக ஒருமுனைவாக்கப்பட்ட வல்லரசுகளின் செயல்கள், கூட்டுச்சேர்ந்த வல்லரசுகளின் செயல்கள், ஒருங்கிய வல்லரசுகளின் செயல்கள் அமைகின்றன.

முனைவாக்கப்பட்ட வல்லரசுகளாக ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, சீனா என்பன அமைகின்றன. கூட்டுச் சேர்ந்த வல்லரசுகளாக ஐரோப்பிய ஒன்றியம் அமைகின்றது. ஒருங்கிய வல்லரசுகளாக ஈரான், இஸ்ரேல், இந்தியா என்பன அமைகின்றன.

சமூக அசைவில் தொழில்நுட்ப வளர்ச்சி, வர்த்தக வளர்ச்சி, கலாசார வளர்ச்சி, நுகர்வு வளர்ச்சி, இராணுவ வளர்ச்சி என்பவற்றில் உள்ள போட்டித்தன்மைகள் நாடுகளிடையே முரண்பாடுகள் உருவாகுவதில் பங்களிப்புச் செய்கின்றன. உலகில் நெடுநாளைய முரண்பாடுகளாக மத்திய கிழக்கு முரண்பாடுகள், இந்திய - பாகிஸ்தான் முரண்பாடுகள், இந்திய - சீனா முரண்பாடுகள், வட கொரியா - தென்கொரியா முரண்பாடுகள், சீனா - தாய்வான் முரண்பாடுகள் அமைகின்றன. அண்மைய முரண்பாடுகளாக ரஷ்ய - உக்ரைன் முரண்பாடுகளும் இஸ்ரேல் - காஸா முரண்பாடுகளும் காணப்படுகின்றன. இந்த முரண்பாடுகளுள் ஈழத்தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமான முரண்பாடும் விதிவிலக்கல்ல. எனவே ஒருங்கிய இனப்படுகொலைமூலம் தமிழினம் அழிக்கப்படாது இருக்கவும் எதிர்வரும் நூற்றாண்டுக்கு தமிழினம் தமிழியம் வெல்க வெல்லியம் அன்ன என உறுதிபூணுவோம்.

அனோதினி சிவனேஸ்வரன்
விவசாய போதனாசிரியர்
மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம்
ஒட்டுசுட்டான்.

# கொக்கோ பழத்திலிருந்து பெறுமதிசேர் உற்பத்திகள்



இலங்கையைப் பொறுத்தவரையில் கொக்கோ பயிர் செய்கையானது பெரும்பாலும் இடை மற்றும் ஈர வலயங்களில் அதிகளவாகச் செய்கை பண்ணப்பட்டு வருகின்றது. இருப்பினும் உலர் வலயத்திலும் இந்தப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியும். அதற்கு எடுத்துக்காட்டாக முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் காணப்படுகின்றது.

கொக்கோவில் இருந்து பல்வேறு வகையான பெறுமதிசேர் உற்பத்திகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். கொக்கோவில் அதிகளவு இலிப்பிட்டு காணப்படுவதுடன் புரதம்,மாப்பொருள்,நார்பொருள், அத்தியாவசியமான அமினோ அமிலங்கள் என்பனவும் காணப்படுகின்றன.

அத்துடன் 100 கிராம் டாக் (கசப்பு) சொக்லேட்டில் 7.87 கிராம் புரதம், 43.06 கிராம் இலிப்பிட்டு,46.36 கிராம் மாப்பொருள்,11 கிராம் நார்பொருள், 12.02 மில்லிகிராம் இரும்புச்சத்து, 230 மில்லிகிராம் மக்னீசியம், 3.34 மில்லிகிராம் நாகம் போன்ற சத்துகள் காணப்படுகின்றன. மேலும் இது சிறந்த ஒக்சியேற்ற நிரோதியாகவும், இரத்த அழுத்தத்தைக் குறைப்பதற்கும் மற்றும் இருதய நோய்கள் ஏற்படும் ஆபத்தையும் குறைக்க உதவும்.

**டாக் சொக்லேட் செய்முறை:**

நன்கு பழுத்த கொக்கோ பழங்களைத் தெரிவு செய்து சுத்தமான கத்தி ஒன்றினைப் பயன்படுத்தி அறுவடை செய்ய வேண்டும். அறுவடை செய்யப்பட்ட கொக்கோ பழங்களின் நடுப்பகுதியில் கத்தியொன்றின் மூலம் வெட்டி உள்ளே காணப்படுகின்ற சளியத்துடன் இணைந்த விதைப்பகுதியை பிரித்தெடுத்து சுத்தம் செய்தல்வேண்டும். அதன் பின்னர் வாழை இலைகளினால் மூடி 23 நாள்களுக்கு நொதிக்கச் செய்ய வேண்டும். நொதித்தல் செயற்பாடானது கொக்கோ சுவையை அதிகரிக்க உதவும். நாள்களின் பின்னர் கொக்கோ விதைகளின் மேல் காணப்பட்ட சளியத்தன்மை நீங்கிக் காணப்படும். அதன் பின்னர் அவற்றினை சூரியஒளியில் உலரவிடுதல் வேண்டும். உலர்ந்த விதைகளை சாதாரண அடுப்பில் அல்லது மின்னடுப்பில் (அவண்) இட்டு வறுத்தெடுத்து விதையுறைகளை அகற்றி துப்புரவு செய்த பின்னர் சுத்தமான கொக்கோ விதைகளை பெற்றுக்கொள்ள முடியும். இவ் உற்பத்தியின் போது 2.150 கிலோ பழத்தில் இருந்து 200 கிராம் வறுத்து தோல் நீக்கிய விதைகள் பெறப்பட்டது.

கொக்கோ விதைகளை எடுத்து அரைப்பானில் இட்டு தேவையான அளவு சீனி மற்றும் சிறிதளவு எண்ணெய் அல்லது உருக்கிய வெண்ணெய் சேர்த்து நன்கு அரைத்த பின்னர் அதனை சொக்லேட் மோல்ட் ஒன்றில் ஊற்றி குளிர்சாதனப் பெட்டியில் வைத்து எடுத்தால் டாக் சொக்லேட் தயாராகிவிடும். கொக்கோ பவுடர் தயாரிப்பதற்கு கொக்கோ விதைகளை எடுத்து அரைப்பான் மூலம் அரைத்து எடுத்து அதிலிருந்து எண்ணெய் பிரித்தெடுத்த பின்னர் மீண்டும் உலர்த்தி கொக்கோ பவுடர் தயாரிக்க முடியும். இதிலிருந்து சொக்லேட் கேக், சொக்லேட் மில்க்சேக், பிறவ்னி போன்ற பல்வேறு பொருள்களைத் தயாரிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்துப் பொலிஸார் உதைந்தே மின்கம்பத்துடன் மோதி உயிரிழப்பு

## நேரில் கண்ட சாட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

மே மாதம் மின்கம்பத்துடன் மோதி ஒருவர் உயிரிழந்த சம்பவத்தை நேரில் கண்ட சாட்சி ஒருவர் சுன்னாகம் பொலிஸில் நேற்று வாக்கு மூலம் வழங்கியுள்ளார். பொலிஸார் சம்பந்தப்பட்ட நபரை உதைந்தமையாலேயே அவர் மின்கம்பத்துடன் மோதி உயிரிழந்துள்ளதாக அதில் தெரிவித்துள்ளார்.

பலாலி வீதியில் கட்டுவன் ஆயக்கடவை பிள்ளையார் கோயிலுக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் மின்சாரசபை ஊழியரான செல்வநாயகம் பிரதீபன் (வயது - 41) என்பவர் உயிரிழந்திருந்தார். இந்தச் சம்பவத்தை நேரில்கண்ட சாட்சி 2 மாதங்களின் பின்னர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வாக்கு மூலம் வழங்கியுள்ளார்.

பிரதீபன், பலாலி வீதியின் ஊடாகப் பயணித்த போது பொலிஸார் மூவர் சிலரை மறித்து சோதனை மேற்கொண்டிருந்தனர். பிரதீபனை மறித்தபோது அவர் நிற்காமல் சென்றுள்ளார். உடனே இரண்டு பொலிஸார் அவரை பின்னால் துரத்திச் சென்று வடக்கு புன்னாலைகட்டுவன் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்னால் வைத்து காலால் உதைந்தனர். அவர் நிலைதடுமாறி வீதியின் மத்திய பகுதிக்குச் சென்றிருந்தார்.

மீண்டும் துரத்திச் சென்ற பொலிஸார் ஆயக்கடவை பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உதைந்தபொழுது, அந்த நபர் நிலை தடுமாறி அருகில் இருந்த மின்சாரக் கம்பத்துடன் மோதி, குற்றுயிராக இருந்தார். அவரை எடுத்துச் சென்று மருத்துவமனையில் சேர்க்க நாங்கள் முயற்சித்தபோதும் அவரை உதைந்து விழுத்திய பலாலி போக்குவரத்து பொலிஸார் அனுமதிக்கவில்லை, என்று சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஒ-23)

# ரயில்வே நிலைய அதிபர்கள் இன்று பணிப்புறக்கணிப்பில்

கொழும்பு, ஜூலை 10

ரயில் நிலைய அதிபர் சங்கத்தினர் நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளதால், இன்றைய தினம் ரயில் சேவைகள் பெருமளவில் இயக்கப்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பருவகால அட்டையை பயன்படுத்தும் ரயில் பயணிகள் இ.போ.ச. பேருந்துகளில் அந்த பருவகால அட்டையை பயன்படுத்தி இன்று பயணம் செய்ய முடியும் என போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது. (ஒ-இ)

# பணத்தை மிதித்த வர்த்தகருக்குப் பிணை

யாழ்ப்பாணம், ஜூலை 10


பணத்தை காலால் மிதித்த வர்த்தகர், யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தால் கடும் எச்சரிக்கையுடன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பிரபல வர்த்தகர் ஒருவர் பணத்தை காலால் மிதிக்கும் வீடியோ பதிவுகள் அண்மையில் சமூக ஊடகங்களில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில், அது தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

விசாரணைகளின் அடிப்படையில் அந்த வர்த்தகருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்ட நிலையில், வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே, பணத்தை காலால் மிதித்த வர்த்தகரை கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிபதி ஆனந்தராஜா, அவரை பிணையில் செல்ல அனுமதித்தார். வழக்கு எதிர்வரும் 26ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது. (ம-26)

# மரண அறிவித்தல்



தோற்றம் 10.05.1937 மறைவு 09.07.2024

## திருமதி தர்மலிங்கம் நல்லம்மா

ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும், வட்டு தெற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மலிங்கம் நல்லம்மா நேற்று (09.07.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் ஸ்ரீகோகிலாம்பிகை (ஓய்வு நிலை ஆசிரியர்) அவர்களின் அன்புத் தாயாரும், ஆனந்தகுமார் அவர்களின் அன்பு மாமியாரும், பேபிபிருந்தாயினியின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

காளிகோவிலடி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
மகள், குடும்பத்தினர்.

# விலைக்கேள்விக்கான கோரல் - (2024/01)

## விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சு வடமாகாணம்.

01. விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சு வடமாகாணம், பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் வடமாகாண அமைச்சு பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

02. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

03. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.

04. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Bidding data & Contract Data (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

05. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள், செயலாளர், விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சு வடமாகாணம், வடமாகாண அமைச்சு பெறுகைக்குழு (தொலைபேசி இல:- 021-221 7306 /021-221 7303 தொலைநகல் 021-2217304) என்னும் முகவரியில் தகவலைப் பெறலாம் என்பதுடன், அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் 10.07.2024 முதல் 30.07.2024 வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கேள்வி ஆவணம் வழங்கும்/ பெற்றுக் கொள்ளும் காலம் | | | | | 2024-07-10 முதல் 2024-07-30 வரை | | |
| | விலைக் கேள்விக்கு முன்னரான கூட்டம் | | | | | 2024-07-19 அன்று பி.ப 2.30 | | |
| | கேள்வி மூடுதல்/திறத்தல் | | | | | 2024.07.31 அன்று மு.ப 10.30 | | |
| கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | மீளளிப்புச் செய்யப்படாத கேள்வித் தொகை | கேள்விப் பிணை விபரம். தொகை | கேள்விப் பிணை விபரம். தேவைப்படும் காலம். | கேள்வி செல்லுபடியாகும் காலம் |
| NP/31/02/F03/P.OB/2024 (CBG) | Renovation and Extension of the Farm Manager's Quarters for Ministry of Agriculture, Northern Province. | 56.94 | 240 | C4 அல்லது மேல் (கட்டடங்கள்) | 13,500.00 | 570,000.00 | 2024.11.27 வரை | Till 2024.10.30 |
| NP/31/02/F03/P.FP/2024/(PSDG) | Construction of Fish Pond at Sivapuram in Thunukai DS Division, Mullaitivu District | 14.93 | 120 | C6 or C5 Irrigation & Drainage Canal | 4,000.00 | 150,000.00 | 2024.10.30 | Till 2024.10.02 |

06. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை செயலாளர், விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சு வடமாகாணம், வடமாகாண அமைச்சு பெறுகைக்குழு எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 10.07.2024 முதல் 30.07.2024 வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையான காலப்பகுதியில் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. விலைக்கேள்விகள் (மூல மற்றும் நகல் பிரதிகள்) 31.07.2024ம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தவிசாளர், வடமாகாண அமைச்சு பெறுகைக்குழு, விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சு, வடக்கு மாகாணம், பலாலி வீதி, திருநெல்வேலி, எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சு வடக்கு மாகாணம், பலாலி வீதி, திருநெல்வேலி எனும் முகவரியில் 19.07.2024 அன்று பி.ப 02.30 மணிக்கு நடைபெறும்..

09. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

"விலைக்கேள்வியானது தேசியபோட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VAT மற்றும் வேறுவரிகள்) 50மில்லியனினுள் இருப்பின், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தரமுன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii)ல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும்"

**தவிசாளர்,**
**வடமாகாண அமைச்சு பெறுகைக்குழு**
**விவசாயமும் கமநல சேவைகளும்,**
**கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம்,**
**மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சு, வடமாகாணம்,**
**2024.07.10**

(cr.42798) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கறைபடியாக்...

றிய இரும்புப் பெண் என்று இந்துசமயப் பேரவையின் தலைவரான ஈசான சக்தி கிரீவன் தெரிவித்துள்ளார்.

தங்கம்மா அப்பாக்குட்டி தொடர்பான நினைவுப் பேருரை, பேரவை மண்டபத்தில் காரை த.சற்குணராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு உரையாற்றினார்.

ஈசான சக்திகிரீவன் மேலும் தெரிவித்ததாவது:-

நாவலர் போல் சீலநெறியுடையோர் அருகத்தொடங்கிவிட்டனர். உண்மை, நேர்மை, அஞ்சாமை, தர்ம சிந்தனை, தவவாழ்வு, ஒழுக்கம், கப்பலேறிக் கரைகடக்கும் அளவில் இருக்கிறது. பேச்சுப்பல்லக்கு தம்பி கால்நடையாகிவிட்டது. இதை நாமனைவரும் துணிந்து சரிசெய்ய வேண்டும். காசுக்காக காலில்விழப் பழகிவிட்டோம். இதிலிருந்து விடுபடப் பல தியாகங்களைச் செய்யவேண்டியுள்ளது.

தமிழ் நிலத்தில் பொதுப்பணியில் ஈடுபடுவோர் கறைபடியாத கரங்களோடு திகழ வேண்டுமென்பதை வாழ்நாள் முழுவதும் நினைந்து நினைந்து நெறிபிசகாது வாழ்ந்த பெருமை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியையே சாரும்.

பொதுப்பணியில் சேரும் ஒரு சதத்துக்கும் கணக்குகாட்டவேண்டும் என்று அடிக்கடி கூறுவார். இதை நாவலர் வாழ்விலும் கண்டு மகிழலாம். பொதுப்பணி புரிவோர் தமது சொத்தை தியாகம் செய்வதோடு தமது சொத்தைப் பிரகடனம் செய்யவும் துணிவு பெற்றவர்களாகத் திகழ்வதோடு உறவுப்பாசம் அற்றவர்களாகவும் இருக்கவேண்டுமென்று அடிக்கடி கூறுவார். காணிபிடிப்பது, வாகனங்கள், கட்டடங்களைத் தமதுடைமையாக்குவது எல்லாம் மாபாவச் செயலென்பார்.

புகழுக்காக அலையும் உலகில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அதற்கடிபணியாது துணிந்து நின்ற இரும்புப் பெண்ணாகத் திகழ்ந்து சாதனை பல படைத்தார். ஆசிரியர் சுந்தரம், மயில்வாகனம், பண்டித மணி சி.கணபதிப்பிள்ளை, பண்டிதர் நமசிவாயம், எவ்.எக்ஸ்.சி.நடராசா போன்றோரிடம் ஐயம் திரிபறக்கற்ற பெருமைக்குரியவர்.

அம்மையார் ஆசிரிய சேவையில் இருந்தபோது இவரது தரம், பதவிமூப்புக் காரணமாக அதிபர் பதவி இவரைத் தேடிவந்தபோது அதனைத் தூக்கி எறிந்துவிட்டு ஆசிரியப்பணியைச் செய்வனே செய்தவர். ஓய்வுநேரத்தில் சமய சொற்பொழிவாற்றி மக்கள் மனம் கவர்ந்தவர். அநேகமான இன்றைய பேச்சாளர்கள் நுனிப்புல்மேய்ந்துவிட்டு பொய்மையாளரைத் துதிபாடி பணம் பறிக்கும் பாதகர்களாகக் காணப்படுகின்றார்கள். சமயானுஷ்டானம் இல்லாத வெறும் வேடதாரிகளாகக் காணப்படுகிறார்கள். அதில் சிலர் ஆதரவற்ற முதியோரைப் பாதுகாப்பது போல் பாசாங்கு பண்ணி அவர்கள் சொத்துகளை மோசடிசெய்தும் விடுகிறார்கள்.

இவர்கள் எத்தனை காலம்தான் ஏமாற்றப்போகின்றார்கள். இவர்கள் செய்த மோசடி உடைமைகளை உரியவர்களிடம் ஒப்படைத்துவிட்டு கௌரவமாக நடக்க இனியாவது கற்றுக்கொள்வார்கள் என்று நம்புகின்றேன். இத்தகையோர் அம்மையாரிடம் முறையாகப் படியாததால் வந்ததே இத்தகைய குணங்கள்.

அம்மையாரிடம் முறையாக பத்து வயதிலிருந்து கற்ற என்னிடமாவது கற்றுத்திருந்த வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஜெயரட்ணம் மறைவின் பின் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான பரிபாலனசபைத் தலைவியாக அம்மையார் பதவியேற்றார். அதன்பின் துர்க்காதேவி ஆலயம் உலகப்புகழ் பெற்றது. அவரது சொற்பொழிவாற்றலுக்கு அம்பாள் மழைபோல் அருக்கிரகித்தாள். சைவாலயங்களில் கறைபடியாது எப்படிப் பணிசெய்ய வேண்டுமென்பதைச் செயலில் காட்டினார்.

அம்மையாரைத் தலைமையேற்று நடத்துமாறு பல ஸ்தாபனங்கள் அழைத்தபோது மறுத்து அதற்கு இசையாது துர்க்கை அம்பாளைச்சரணடைந்துபரிபாலனசபையைத் தலைமையேற்று இறைபதம் அடையும்வரை களங்கமில்லாது நடத்தி வெற்றிகண்ட வீரத்தாயின் நாமம் என்றும் நின்று நிலவும் என்பது திண்ணம் - என்றார். (அ-ம)

## பொறுப்பற்றுச்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குப் பதில் மருத்துவ அத்தியட்சகராகக் கடந்த ஜூன் மாதம் நியமிக்கப்பட்ட மருத்துவர் அர்ச்சுனா இராமநாதன் அங்கு நிலவிவந்த நிர்வாகச் சீர்கேடுகளையும், குறைபாடுகளையும் அடையாளம் கண்டு அவற்றைச் சீர்செய்வதற்குத் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

அதனடிப்படையில் பெண் நோயியல் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றைச் செயற்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடம் கடந்த 14 வருடங்களாகப் பயன்படுத்தப்படாமல் இருந்த நிலையில், அதை மீண்டும் பயன்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தார்.

நன்கொடையாளரால் வழங்கப்பட்ட 20 மில்லியன் ரூபா பெறுமதியான சத்திர சிகிச்சை உபகரணங்களும் பயன்படுத்தப்படாமல் இருந்த நிலையில் அவற்றைச் செயற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட மருத்துவ அத்தியட்சகர் முதற்கட்டமாக தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் மகப்பேற்றுப் பிரிவு ஆகியவற்றைச் செயற்படுத்தியுள்ளார்.

மேலும், சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டிய நோயாளர்கள் அனைவரும் யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு வந்த நிலையில் சத்திர சிகிச்சைப் பிரிவை இயக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அதேபோன்று குறித்த மருத்துவமனையில் உயிரிழப்பவர்களின் உடல்கள் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு வந்த நிலையில் அதனை சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் மேற்கொண்டு, பொதுமக்களுக்கு ஏற்பட்டு வந்த தேவையற்ற அசௌகரியங்களைத் தடுப்பதற்கும் மருத்துவர் அர்ச்சுனவால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மருந்துப் பொருள்கள் உரிய களஞ்சியப்படுத்தல் ஏற்பாடுகள் இன்றித் தரையில் போடப்பட்டிருந்தது. குறித்த மருத்துவமனையில் 22 மருத்துவர்கள் கடமையாற்றி வந்ததுடன் அவர்களுள் பெரும்பாலானவர்கள், மாதத்தில் 10 நாள்கள் மாத்திரமே மருத்துவமனையில் கடமையாற்றியுள்ளனர். இவ்வாறான பல்வேறு சீர்கேடுகள் மற்றும் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு மருத்துவ அத்தியட்சகர் முன்னெடுத்த முயற்சிகளை விரும்பாத சக்திகள் அங்கு தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளன. இவை அனைத்தையும் அறிந்து கொண்ட பொதுமக்கள் பெரியதொரு போராட்டம் ஒன்றினையும் முன்னெடுத்தனர்.

எனவே, குறித்த விவகாரம் தொடர்பில் உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டுநீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுப் பொறுப்பற்றமுறையில்செயற்பட்டஅனைவரும் சட்டத்தின் மூலம் தண்டிக்கப்படவேண்டும் - என்றார். (அ-ம-66-26)

## சமஷ்டித்...

நாடாளுமன்றத்தில் நேற்று சிறீதரன் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

"சாவகச்சேரி என்கின்ற பிரபலமான மருத்துவமனை இன்று உலக அரங்கில் பேசப்படும் இடமாக மாறியுள்ளது. அர்ச்சுனா இராமநாதன் எனும் மருத்துவர் அங்கு பதில் மருத்துவ அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் நியமனம், செயற்பாடுகள் சரியா, பிழையா என்பதல்ல. ஆனால், மாகாண அரசுக்கு வழங்கப்பட்டிருந்த சுகாதார அதிகாரத்தை மத்திய அரசு எவ்வாறு மீறியது? மாகாண சுகாதாரப் பணிப்பாளர் செய்ய வேண்டிய நியமனத்தை எவ்வாறு மத்திய அரசு தனது கையில் எடுத்துக் கொண்டது?

இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் 13ஆவது திருத்தச்சட்டம் வந்தபோது சுதுமலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் கூறிய விடயம் இன்று உண்மையாகியுள்ளது. ஒற்றையாட்சிக்குள் அந்த 13ஆவது திருத்தச்சட்டம் கேலிக்கூத்தாக மாறியுள்ளது.

பொலிஸ் அதிகாரம் இல்லாத ஏனைய அதிகாரம் தொடர்பில் பேசலாம் என ஜனாதிபதி கூறுகின்றார். காணி அதிகாரத்தை எடுத்துக்கொண்டால் தொல்லியல் திணைக்களம், வனவளத் திணைக்களம், கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம், மகாவலி எனப் பல தரப்புகளும் காணிகளில் கைவைக்கின்றன.

இவ்வாறு இருக்கையில் மாகாணத்துக்கு வழங்கப்பட்ட சுகாதார அதிகாரம் கேள்விக்குறியாகியுள்ளது. மக்களை ஏமாற்றும் தீர்வு எடுபடாது, மக்களை ஏமாற்றவும் முடியாது என்பது சாவக்கச்சேரி எழுச்சிமூலம், எண்ணங்கள்மூலம் வெளிப்பட்டுள்ளது. ஆகவே, தமிழினத்தை தேசிய இனமாக அங்கீகரித்து, சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வழங்கவேண்டியது அவசியம். அப்போதே பொருளாதார அபிவிருத்தியும், நிரந்தர சமாதானமும் ஏற்படும்" - என்றார். (அ-ம-44)

## பணிப்...

அசௌகரியம் ஏற்படாத வகையில் செயற்பட்டு, கடமைக்கு வருகைதந்த நிறைவேற்றுத்தரம் அல்லாத அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் விசேட கொடுப்பனவை வழங்குவதற்கும், அவர்கள் வருகைக்கும் எதிர்கால பதவி உயர்வுகளுக்கும் பயன்படுத்தும் வகையில் விசேட பாராட்டுச் சான்றிதழொன்றை வழங்குவதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பாக அனைத்து அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாகாண பிரதான செயலாளர்களுக்கு அறிவிக்குமாறும் அது தொடர்பிலான சுற்றுநிருபம் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## நாடாளுமன்ற...

குகதாசன் பதவியேற்றுள்ளார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் நாடாளுமன்றத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை அவர் பதவியேற்றார்.

திருகோணமலை திரியாய் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகம் குகதாசன் அரச அறிவியல்துறையில் முதுநிலை பட்டதாரியாவார். நீண்ட காலமாக கனடாவில் வசித்த வந்த சண்முகம் குகதாசன் கடந்த 2020ஆம் ஆண்டு முதல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவராக இரண்டு சந்தர்ப்பங்களில் கடமையாற்றியுள்ளார். 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பாகப் போட்டியிட்ட அவர் 16 ஆயிரத்து 770 விருப்பு வாக்குகளைப் பெற்றார். இரா.சம்பந்தனுக்கு அடுத்தபடியாக அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவர் என்ற அடிப்படையிலேயே, அவர் தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ-ம-66)

## ஐ.ம.சக்தியுடன்...

உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"நான் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையப்போவதில்லை. ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறியபோதுகூட கட்சித் தலைவருக்கு அறிவித்துவிட்டு, நன்றிகூறியே விடைபெற்றேன். எனவே, இரகசிய நகர்வுகள் என்னிடம் கிடையாது.

ஐக்கிய தேசியக் கட்சியினர் வேண்டுமானால் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையலாம். ஏன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ககூட வரலாம். அவ்வாறு அவர் வந்தாலும் ஜனாதிபதி வேட்பாளர் பதவியில் மாற்றம் வராது" - என்றார். (அ-ம-44)

## பதில்...

கொணர்ந்த நிலையில் வடக்கு சுகாதாரத் துறையினர் மத்தியிலிருந்து அவருக்கு எதிர்ப்பும், மக்களிடமிருந்து பெரும் ஆதரவும் கிடைத்தது. இந்த விடயம் பெரும் களேபரங்களை ஏற்படுத்தியிருந்த நிலையில், மருத்துவர் அர்ச்சுனா தற்போது விசாரணைகளுக்காக கொழும்புக்குச் சென்றுள்ளார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே, சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் புதிய மருத்துவ அத்தியட்சகராக கோபாலமூர்த்தி ரஜீவ் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றார். (அ-ம-66-125-26-27-20)

## வல்லிபுர...

மேலாக வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் பிரதம குருவாகப் பணியாற்றியுள்ளார். வடமராட்சி துன்னாலை மிந்திரன் அம்மன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும், ஆவரங்கால் சிவன் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட அவரின் இறுதிக் கிரியைகள் அவரின் வதிவிடமான சிவன் கோவிலடி, ஆவரங்காலில் இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெறவுள்ளன. (அ-ச-66-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 29 ஆவது...

யில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்களான பகீரதன், ஜெயந்தன், றமணன், அனுசன் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தி ஈகச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

1995ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் திகதி நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி சிறிய கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானப் படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாகக் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியதில், 147 பேர் பலியாகினர். 350க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்திருந்தனர். (அ-ம-125)

## பட்ஜெட்...

நடவடிக்கைகளும் அதே சந்தர்ப்பத்தில் முன்னெடுக்கப்படு மென நிதி அமைச்சின் மூத்த பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார். (ஓ-66)


## காணி விற்பனைக்கு

பளை தர்மக்கேணியில்
21 ஏக்கர் காணி
விற்பனைக்கு உண்டு.
1 ஏக்கர் 12 லட்சம்
தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.
தொடர்புகளுக்கு:
075 274 1117
(CS/897) J-1

## வங்கி மீதி வசதி (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 173 7684

## வேலையாள் தேவை

பருத்தித்துறை புலோலி மேற்குப்பகுதியில் வயதான பெண்மணிக்கு வீட்டில் தங்கியிருந்து சமையல் வேலைகளிலும் வீட்டு வேலைகளிலும் உதவ ஒரு பெண் உதவியாளர் தேவை. நேர்மையானவராகவும், வேலைகளை நேர்த்தியாகச் செய்யக்கூடியவராகவும் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:-
074 154 7811, 077 792 1890
(CS/55635) J-1





புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும்
## ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
கண்ணகைபுரம்

முதலாம் வருட கும்பாபிஷேக தின 1008 சங்காபிஷேகம் (12.07.2024)

அன்பார்ந்த அம்பிகை அடியார்களே!
உலகமெல்லாம் பரந்து வாழும் எமக்கு அருள்பாலிக்கும் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அன்னை ஆலயத்தின் 2023ஆம் ஆண்டு நடைபெற்ற மகா கும்பாபிஷேக பெருவிழாவின் முதலாம் வருட பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் குரோதி வருடம் ஆனி மாதம் 28ஆம் நாள் வெள்ளிக்கிழமை (12.07.2024) அன்று 1008 சங்காபிஷேகம் மற்றும் விசேட பூஜைகள் நடைபெற அம்பிகையின் திருவருள் கூடியுள்ளது எனவே அம்பிகை அடியார்கள் ஆரா சீலர்களாய் ஆலயத்தில் இடம்பெறும் 1008 சங்காபிஷேகம் மற்றும் பூஜைகளில் பங்குபற்றி அம்பிகையின் திருவருளை பெற்றுய்யுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

கிரியைகள் விபரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| காலை 8.00 மணி | சங்காபிஷேக சங்கு பூஜை |
| காலை 10.00 மணி | 1008 சங்காபிஷேகம் |
| காலை 11.30 மணி | மூலஸ்தானத்தில் எழுந்தருளி இருக்கும் அம்பாளுக்கான பூஜை |
| காலை 11.45 மணி | வசந்த மண்டப பூஜை |
| மதியம் 12.00 மணி | அம்பிகை உள்வீதி உலா |
| மதியம் 1.00 மணி | மகேஸ்வர பூஜையாகிய அன்னதானம் இடம்பெறும் |

நன்றி
தொடர்புகளுக்கு: 021 3156666, 0777 174279
ஆலய நிர்வாக சபையினர்

## வேலை வாய்ப்பு

நிதி நிறுவனத்தில் வேலை செய்ய ஆர்வம் உள்ளவரா நீங்கள் !
இப்போதே உங்கள் சுயவிபரக்கோவையை எங்களுக்கு அனுப்புங்கள்.
வெற்றிடம் காணப்படும் இடங்கள் :
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்.
E.mail :- indran.nevin15@gmail.com
T.P : (Whatsapp) 077 329 0597
(CR/42781) J-1


# மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 11 . 1948 — மறைவு 09 . 07 . 2024

## அமரர் அலெக்ஸ்சாண்டர் மேரிதிரேசா (நேசம்)

சில்லாலையை பிறப்பிடமாகவும் சீந்திப்பந்தல் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் அலெக்சாண்டர் மேரிதிரேசா (நேசம்), நேற்று (2024.07.09) செவ்வாய்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை-ஜாகம்மா தம்பதியரின், செல்வப்புதல்வியும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை-மரியம்மா (செல்லக் குட்டி), தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை அலெக்சாண்டர் அவர்களின் அன்பு மனைவியும், சவரிமுத்து லூர்துமலர் (மலர், கனடா), செபஸ்ரியாம் பிள்ளை திரேசம்மா (ராணி -சில்லாலை), அமரர் சூசைப்பிள்ளை, மரியதாஸ் (தம்பிஜயா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் அந்தோனிப்பிள்ளை அருளானந்தம் (செகநாதர்), அமரர் சவரிமுத்து, அமரர் செபஸ்ரியாம்பிள்ளை மரியதாஸ் தெயா ஆகியோரின் மைத்துனியும், அமலராஜன் (சிறி-லண்டன்), யூட் கருணாகரன் (கருணா-சுவிஸ்), லூட்ஸ்சியாமினி (பிரான்ஸ்), அனற்நிஷாந்தினி, (சீந்திப்பந்தல் இளவாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மேரி ராஜினி (ஜெசி-லண்டன்), செல்வரஜனி (அனிதா-சுவிஸ்), நிமலரஞ்சன் (நிமால் -பிரான்ஸ்) தனநாதன் (சீந்திப் பந்தல்- இளவாலை அபிவிருத்தி உத்தியோகத்தர், கூட்டுறவு உதவி ஆணை யாளர் அலுவலகம்-மன்னார்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அஸ்விதா (லண்டன்), அபிசன் (லண்டன்), அபின்சா (லண்டன்), நிலுசியா (பிரான்ஸ்), அருண் (சுவிஸ்), கீர்த்திசன் (சுவிஸ்), தமிழினியன் (சீந்திப்பந்தல்), சகானா (சீந்திப்பந்தல்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (2024.07.12) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சீந்திப்பந்தலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று போயிட்டி இளவாலை புனித லூர்து அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, லூர்து அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

| | | |
|---|---|---|
| அனற் நிஷாந்தினி | (மகள்) | 0094 77 058 3310 |
| தனநாதன் | (மருமகன்) | 0094 77 160 4059 |
| அமலராஜன் சிறி | (மகன்) | 0044 744 598 9488 |
| லூட்ஸ்சியாமினி | (மகள்) | 0033 69 541 0165 |

(CS 901) V-1

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 10 . 01 . 1961 — இறப்பு 10 . 07 . 2023

அமரர்
## சுப்பிரமணியம் அரியராணி (ராணி)
(ஸ்தாபகர் - முத்துக்குமரன் சுப்பர்மார்க்கெட் கைதடிச் சந்தி, கைதடி)

**திதி : 10.07.2024**

பத்துமாதம் பக்குவமாய் சுமந்தெடுத்து
பண்பீந்து பாரிலெம்மை உயரச் செய்தீர்
எக்கணமும் அயராது உழைத்து எமக்காய் தேடி
எல்லோரும் நலம் வாழ பலவும் செய்தீர்
தக்கவரே எங்கள் அம்மா தவத்தின் குன்றே
தரணியிலே உம்பெருமை என்றும் சொல்வோம்.
மக்கள் எமை என்றும் பேரன்புடன் நீர் வளர்த்தீர்
கண்ணை இமை காப்பது போல் காத்து நின்று கல்வி தந்தீர்
தூங்காமல் தூங்கி எமக்காய் உங்கள் சுகத்தை தான் துறந்து
அவனிபோற்ற வளர்த்தீர்களே அம்மா
பெருமை கூறி அழுவதற்கோ வழியில்லையே.
மனமோ வெந்து பேச்சறியா நிற்கின்றோம்மா
கொடிய நோய் எனைசூழ்ந்தது என்று சொன்னீர்களே
இது பொய்யாக இராதா என்று ஏங்கினோம் அம்மா
பூவுலகில் கடமை முடிந்ததென்று
வையகம் விட்டு வானுலகம் சென்றாயோ
அந்த காலனுக்கும் இரக்கமில்லை போலும்
எங்களிடமிருந்து உங்களை கூட்டிச் சென்று விட்டான்.
அடங்கியதா உம்குரவம் ஆறுவோமோ அம்மா.
எமதருமை அம்மாவே தவிக்கின்றோம் நாம்.

**என்றும் அன்பு பிள்ளைகள்**

(CS/900) J-1

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org